விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 19 புதன்கிழமை (05.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

## ஜனாதிபதியின் உரைக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை!



### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நேற்றைய மாநாட்டில் ஆற்றிய உரை அவருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வருவதற்கே வழி வகுக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு நேற்று மாலை கொழும்பு சுகததாச அரங்கில் இடம்பெற்றது. இதன்போது ரணில் 23☛

## அரசியல் அமைதியின்மை எதிர்வரும் வாரம் தீரும்

### நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் அமைதியின்மை எதிர்வரும் வாரத்துக்குள் முழுமையாக முடிவுக்கு கொண்டு வரப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அது நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தாய்நாட்டின் எதிர் காலத்துக்காகவும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நெருக்கடி நிலையை தோற்றுவித்தது தான் அல்ல என்றும், நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற ஐக்கிய 23☛

### பாராளுமன்றம் கலைப்புக்கு எதிரான

## மனுக்களின் விசாரணை இன்று வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)
ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13 மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்றைய தினம் நிறைவடைந்துள்ளன.

அதன்படி , இன்றைய தினம் வரையில் குறித்த விசாரணைகளை ஒத்திவைக்க நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட நீதிபதிகள் குழாமினால் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த விசாரணைகள் எதிர்வரும் 6-ம் திகதி 23☛

# வடக்கு மக்களை ரணில் ஏமாற்றினார்

## தீர்வுக்கு வாய்ப்புக்கள் இருந்தும் அவர் அதனைச் செய்யவில்லை

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றச்சாட்டு

(கொழும்பு) வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சந்தர்ப்பம் அமைந்திருந்தும் ரணில் விக்கிரமசிங்க வேண்டும் என்றே தீர்வு வழங்காமல் காலம் தாழ்த்தினார் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு மக்களை ரணில் விக்கிரமசிங்க ஏமாற்றிவிட்டார் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார். (23-ம் பக்கம்...)



## நெருக்கடிகளுக்கு தீர்வுகாண அனைவரும் ஒன்றிணையுங்கள்

### சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்து

(கொழும்பு)
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு ஜனாதிபதி மற்றும் அரசியல் தரப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே தீர்வு காண வேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் ஜனநாயகத்திற்கு உட்பட்டது என்பதுடன், அனைத்துலக பாராளுமன்ற சங்கம் மற்றும் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தில் 23☛

## ஜனநாயகத்தை உறுதிப்படுத்துக

### சஜித் வேண்டுகோள்

(கொழும்பு)
நீதிமன்ற தீர்ப்புகளுக்கு மதிப்பளித்து நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திய ஐக்கிய தேசிய கட்சி பிரதி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச,"மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு சவால் விடுக்கின்றமையானது 23☛

## ஹிட்லர் முன்னெடுத்த ஆட்சியே இலங்கையில் உருவாகியுள்ளது

### ரணில் வன்மையான கண்டனம்

(கொழும்பு)
ஒரு காலத்தில் ஹிட்லர் மக்கள் அனைவரும் என்னுடன் உள்ளார்கள் என கூறி, அரசியலமைப்பினை நீக்கி புதியதொரு சட்டத்தை உருவாக்கி ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்தார் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அதே நிலையே இன்று உருவாகியுள்ளது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நிலை வன்மையாக கண்டிக்கத்தக்கது எனவும் தெரிவித்தார். 23☛



## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

### கட்சித் தலைவர்களின் கூட்டம் காலை இடம்பெறும்

(கொழும்பு)
இன்று புதன்கிழமை காலை கட்சித்தலைவர்களின் கூட்டம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டம் இன்று காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பாராளுமன்ற ஆசனங்கள் முன்பு ஒதுக் 24☛

## மண்ணுக்குள் சிக்குண்டு குடும்பஸ்தர் மரணம்

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)
மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் மண் அகழ்வில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் மண்ணில் மூழ்கி மரணமான சம்பவம் சிலாபத்துறை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 23☛

## ரணில் என்னையும் நாட்டையும் சீரழித்தார்

### ஜனாதிபதி மைத்திரி புலம்பல்

(கொழும்பு)
நல்லாட்சியின் கொள்கையையும் சீரழித்து ஐக்கிய தேசியக் கட்சியையும் சீரழித்து என்னையும் சீரழித்தமையால் நான் பிரதமர் பதவியிலிருந்து ரணிலை விரட்டியடித்தேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்றது.

குறித்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்று 23☛

## ஆட்சியை எவ்வாறு பிடிப்பது என்று தெரியும்

### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)
நாங்கள் ரணிலை பிரதமராக்குமாறு தொடர்ந்து அழுத்தம் வழங்கினால் தான் பதவி விலக நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்தார் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். 02☛

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மாற்றுவலுவுடையோர் சுய உதவிக்குழுவின் ஒன்று கூடல் நிகழ்வானது நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஒன்று கூடல் நிகழ்விற்கு அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களைஸ்ரீயும் கலந்து கொள்ளுமாறு அந்த அமைப்பின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

# கைதிகளின் விடுதலை தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## கனடா உயர்ஸ்தானிகரிடம் ஜனநாயக போராளிகள் கட்சி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காத்திரமான பொறுப்புக்கூறல் தொடர்பில் கனடா அரசு இலங்கைஅரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென கனடா உயர் ஸ்தானிகரிடம் போராளிகள் சார்பில் ஜனநாயக போராளிகள் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா உயர் ஸ்தானிகர் டேவிட் மெகினனுக்கும் போராளிகளுக்கும் இடையேயான விசேட சந்திப்பொன்று புதுக்குடியிருப்பு கைவேலியில் அமைந்துள்ள ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அசாதாரண நிலையில் போராளிகளது தற்போதைய பாதுகாப்பு மற்றும் இயல்பு நிலை தொடர்பில் கரிசனையுடன் உயர் ஸ்தானிகரால் கேட்டறியப்பட்டது.

தமிழர்களது பொருளாதார மேம்பாடு கனேடிய தமிழர்களது தாயகமக்கள் நலச் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. தாயகத்தில் உள்ள 89 ஆயிரம் பெண்களை தலைமையாக கொண்ட குடும்பங்களுக்கு கனடா அரசு விசேட நலன்சார் வேலைத் திட்டம் ஒன்றினை ஆரம்பிக்குமாறு எம்மால் கோரப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காத்திரமான பொறுப்புக்கூறல், தமிழர்களது கௌரவமான தீர்வு முயற்சிகளில் கனடா அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் போராளிகள் சார்பில் கோரப்பட்டது.

தமிழர்கள் அல்லலுற்று ஆக்கிரமிப்புக்களை தாண்டி புலம்பெயர்ந்து கனடாவில் தஞ்சமடைந்தபோது எமது மக்களை அரவணைத்து அவர்களது மொழி கலாசார வாழ்வியலில் பூரண சுதந்திரத்துடன் வாழ வைத்தமைக்கு எமது தாயக மக்களின் சார்பில் கனடா அரசுக்கு போராளிகளால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இன நல்லிணக்கமும் சக வாழ்வும் ஏற்படுத்தப்படும் வரை புலம்பெயர்ந்தோர் திருப்பி அனுப்பப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டதாக ஜனநாயகபோராளிகள் கட்சியின் ஊடக இணைப்பாளர் க.துளசி தெரிவித்துள்ளார். (ம-9,315)

# யாழ் மாவட்ட கட்டளைத்தளபதியின் கருத்து மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

## அனந்தி சசிதரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியில் சோதனைச் சாவடிகளை அமைத்து மக்களைக் காப்பாற்றுவோம் என்ற யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதியின் கருத்து மக்களுக்கு மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், இன முரண்பாட்டையும் நல்லிணக்கத்தையும் சிதைக்கும் செயற்பாடு என ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்தார்

யாழ். நகரில் அமைந்துள்ள யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியின் கருத்து முன்னாள் போராளிகளை அச்சமூட்டுவது மட்டுமன்றி வடக்கில் உள்ள மக்களும் அச்சத்துடன் வாழும் ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது.

யுத்தம் நடைபெற்று யுத்த அழிவில் இருந்து மீண்டெழுந்து, புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் தமது குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களின் மனதில் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் படைத் தளபதியின் கருத்து அமைந்துள்ளது.

படைத்தளபதி இவ்வாறு அச்சமூட்டும் கருத்தை தவிர்த்திருக்க வேண்டும். தமது இராணுவத்தின் நிலை மற்றும் இராணுவத்தின் கடமைகளை ஆற்றட்டும். ஆனால், சமூக மயப்படுத்தப்பட்டிருந்த போராளிகளை அச்சமூட்டும் வகையில் கருத்துக்கள் தெரிவிப்பதென்பது, மிகவும் வருத்தத்திற்குரியது.

தெற்கில் தோன்றியிருக்கும் பதவிக்குழப்பம் வடக்கில் மக்களை எந்தளவிற்கு பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றது என்பதற்கு அப்பால், இந்தக் கொலைச் சம்பவமும் கூட ஏதாவது ஒரு பின்னணியில் நடந்திருக்கலாம் என மக்கள் கருதுகிறார்கள்.

கொலை செய்தவர்கள் யார் என கண்டுபிடிப்பதற்கு முன்னரே, போராளிகள் மீது அந்தப் பழியைத் தூக்கிப் போடும் செயற்பாடு மக்களை தொடர்ந்தும் அச்சத்தில் வைத்திருக்கும் முயற்சி.

இவ்வாறு இனங்களுக்கு இடையில் முரண்பாட்டினையும், நல்லிணக்கத்தையும் சிதைக்கும் கருத்துக்களை அதிகாரத்தொனியில் தெரிவிப்பது கண்டனத்திற்குரிய விடயம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9,101)


## வீடு விற்பனைக்கு

யாழ். ரக்கா றோட், ரக்கா லேனில் மேல்மாடி வீடு நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

**மணியம் : 0764734160**
**சிவா : 0773212884**

(6665)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-4591)


# ஆட்சியை எவ்வாறு...

மேலும் அமைச்சின் செயலாளர்களை அழைத்து பேசவோ, அவர்களுக்கு கட்டளைகளை பிறப்பிக்கவோ ஜனாதிபதிக்கு தற்போது அதிகாரமில்லை .


நீதிமன்ற உத்தரவிற்கு ஜனாதிபதி கட்டுப்பட்டு செயற்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துவதற்காக ஜனாதிபதி வெட்கப்பட வேண்டும்.

எங்களின் எண்ணத்தில் மாற்றமில்லை நாங்கள் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவையே முன்மொழிகிறோம். ஜனாதிபதி அவரையே பிரதமராக நியமிக்க வேண்டும். அவர் பதவி விலகுவதைப் பற்றி எங்களுக்கு எந்தவித கவலையும் இல்லை.

நாடு இன்று படு பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. இந் நிலையில் ஆட்சியை எப்படி எடுப்பது என்பது எங்களுக்கு தெரியும். எங்களை அந்த நிலைக்கு தள்ளாது ஆட்சியை எங்களிடம் ஒப்படையுங்களென தெரிவித்தார். (ம)

# மரண அறிவித்தல்

## நடராசா ஸ்ரீஸ்கந்தராசா



ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஸ்ரீஸ்கந்தராசா 03.12.2018 திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், ஈஸ்வரி (யாழ்ப்பாணம்), குணநாதன் (கனடா), சறோஜினி (கனடா), பேரின்பநாதன் (கனடா), ரங்கநாதன் (கனடா), காலஞ்சென்ற வசந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமானந்தன் (யாழ்ப்பாணம்), யமுனா (கனடா), வேலாயுதபிள்ளை (கனடா), சைலஜா (கனடா), நிகிலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நளினி, நகுலன், நளாயினி, றஜீத்காந், பரீத்காந், சுஜீத்காந், சங்கீதா, சோனியா ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகன், துஸ்யந்தன், நிர்மலன், துவாரகா, துஸ்யா, பிரவின், அபிநயா, அனித்தா, ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.12.2018 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


ஐயனார் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.

(6681)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்...

அமரர்
## கிட்டிணன் பொன்னையா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 26 |
| 01 | 11 |
| 1937 | 2016 |

ஆண்டிரெண்டு ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்று எம் நனவு மனம் ஏங்குகிறது
தந்தையே உம் இழப்பு நம்மையெல்லாம் உருக்குலைய வைத்ததப்பா
அன்பு கொண்ட உம் வதனம் என்றும் எம்மோடு இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்! எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது அப்பா உங்கள் நினைவு எம் நெஞ்சோடு...

கூவில், புலோலி தெற்கு, புலோலி.

இங்ஙனம் : குடும்பத்தினர்
தொ.பே.இல : 021 226 3482

(C-4605)

# நீதித்துறையின் சுயாதீனச் செயற்பாடு மக்கள் பெருமை கொள்ளத்தக்க விடயம்

## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக குறித்தவொரு கட்சி உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது. எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பிற்கு உயர் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிக்கும் வரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு நடைமுறையில் இருக்கும் என காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து பிரதமராக செயற்படுவதற்கும் அவர் தலைமையிலான அமைச்சரவை அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கும் இடைக்கால தடை விதித்து நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் மகிந்த தரப்பினர் இத்தீர்ப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளன. இவ்விவகாரம் தொடர்பிலேயே சாலிய பீரிஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

கடந்த சில வாரங்களாக நீதித்துறை சுதந்திரமாகவும் தீர்க்கமாகவும் செயற்படுவதனை அவதானிக்க முடிகின்றது. உயர்நீதிமன்றம், மேல்நீதிமன்றம் போன்றவை மாத்திரமின்றி பொதுமக்கள் சார்பான வழக்குகள் மற்றும் குற்றவியல் வழக்குகளிலும் நீதவான் நீதிமன்றங்கள் உட்பட அனைத்தும் சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையானது சட்டத்தின் ஆட்சி மற்றும் சுயாதீன நீதித்துறை என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் அனைவரும் பெருமை கொள்ளத்தக்க விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தலை நடத்த சட்டபூர்வமான அரசு வேண்டும்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

"ஜனாதிபதி நினைத்தபடி தான் தோன்றித்தனமாக பிரதமரை நியமிக்க முடியாது.

பாராளுமன்றப் பெரும்பான்மை உள்ளவரையே ஜனாதிபதி பிரதமராக நியமிக்க வேண்டும்" என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் தேர்தல் நடத்த வேண்டும் என்றால் முதலில் சட்டபூர்வமான அரசு ஒன்று வேண்டும். அதன் பின்னரே பாராளுமன்றில் தேர்தல் நடத்துவதற்கான விசேட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும் சர்வாதிகாரியாக நடக்காமல் அரசியலமைப்பை பின்பற்றுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்வதாகவும் ரணில் தெரிவித்தார். (இ-7)

# இடையூறுகளின்றி மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரி பணிப்புரை

(கொழும்பு)

எவ்வித இடையூறுகளுமின்றி மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.



சகல அமைச்சுக்களின் செயலாளர்களுடனான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதியால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக நியமிக்கப்பட்ட பிரதமர் மற்றும் அமைச்சரவையினர் தமது கடமைகளை நிறைவேற்றுவதனைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் 2018.12.03 ஆம் திகதி இடைக்காலத் தடை உத்தரவு விடுக்கப்பட்டுள்ளமையினால் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கமைவாகப் பொதுச்சேவைகளை எந்தவித் தடைகளுமின்றித் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகளும் கட்டளைகளும் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரச பாதுகாப்பைப் போன்றே நாட்டுக்கும் பொது மக்களுக்குமான தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் குறைவின்றி நிறைவேற்றுவது அனைத்து அரச சேவையாளர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு ஜனாதிபதியால் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எலிக் காய்ச்சலால் 81 பேர் உயிரிழப்பு!

(பொலநறுவை)

பொநறுவை பகுதியில் எலிக் காய்ச்சல் காரணமாக கடந்த மூன்று வாரங்களுக்குள் 10 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிக்குள் 81 பேர் எலிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

எலிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் உரிய முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்ளாமையினாலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் பொலநறுவை சுகாதாரப் பிரிவு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதி, செயலாளர்களோடு நாட்டை பரிபாலனம் செய்யும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்

(கொழும்பு)

நாட்டின் நிர்வாகத் தலைவரான ஜனாதிபதிக்கு அமைச்சரவை ஒன்றில்லாது அமைச்சுக்களின் செயலாளர்களோடு நாட்டை பரிபாலனம் செய்ய கிடைத்திருக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் நிலை குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே பிரதீபா மஹாநாமஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மேன் முறையீட்டு நீதிமன்றின் இடைக்கால தடையுத்தரவையடுத்து பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு அவர்களுடைய பதவியில் செயற்பட முடியாது. இதனால் ஜனாதிபதிக்கு அமைச்சுக்களின் செயலாளர்களோடு இணைந்து நாட்டின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நேர்ந்துள்ளது.


நாட்டின் அரசியல் குழப்ப நிலை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந் நிலையில் நாட்டின் புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை நியமனம் தொடர்பாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றிலேயேஆலோசனைபெறலாம்.

மேன் முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடையுத்தரவானது ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் பிரதமராக செயற்பட ஏற்றுக் கொள்ளுதல் என பொருள் படாது. எது எவ்வாறிருந்த போதும் இந்த இடைக்கால தடையுத்தரவின் காரணமாக பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் அவ்ர்களது அமைச்சுப் பொறுப்புக்கள் கடமைகளிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொட்டம்மான் குறித்து கருணாவிடம் விசாரணை நடத்த வேண்டும் - அநுர







(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பிரதானி பொட்டம்மான் உயிருடன் இருப்பதாக முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறுகின்றார்.

எனினும் இறுதி யுத்தத்தின் போது பொட்டம்மான் இறந்துவிட்டதாக இறுதி யுத்தத்திற்குத் தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டிருக்கின்றார்.

எனவே இருவரின் கருத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்திற்கு தலைமை தாங்கியவரின் கருத்தினை ஏற்பதுவே பொருத்தமாக இருக்கும். அத்தோடு இவ்விடயம் தொடர்பில் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுணதீவில் பொலிஸார் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினை அடுத்து பொட்டம்மான் இன்னமும் உயிருடன் இருப்பதாக கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் கருத்து வெளியிட்டிருந்தார். இவ்விடயம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இரண்டு பொலிஸார் படு கொலை கைது நடவடிக்கை தொடர்கிறது

(வவுணதீவு)

வவுணதீவில் பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபரை மட்டக்களப்பில் வைத்து நேற்றுக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் தமிழீழ விடுதலை புலிகளின் முன்னாள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிவித்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# ஆஸி.,யை அசைக்குமா இந்தியா

## முதல் டெஸ்ட் நாளை அடிலெய்டில் ஆரம்பம்



பயிற்சியின்போது இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் நாளை அடிலெய்டில் ஆரம்பமாகிறது. ஸ்மித், வோர்னர் இல்லாமல் பாதி பலத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாவை இம்முறை இந்திய அணி வெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் நாளை அடிலெய்டில் ஆரம்பமாகிறது. அணித் தலைவர் ஹோலி கடந்த தொடரில் அவுஸ்திரேலிய மண்ணில் 4 டெஸ்டில் 4 சதம் உட்பட 692 ஓட்டங்கள் விளாசினார். சமீபத்திய 8 டெஸ்டில் 879 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இம்முறையும் இவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என நம்பப்படுகிறது. இந்திய அணியின் பும்ரா, புவனேஸ்வர், மொஹமட் ஷமி, இஷாந்த் சர்மா மற்றும் உமேஷ் யாதவ் என வேகப்பந்து வீச்சாளர்களும் நல்ல 'போர்மில்' உள்ளனர். எப்படியும் இந்தியா தொடரை வெல்லும் என முன்னாள் தலைவர்கள் கங்குலி, லாரா (மே.தீவுகள்) பலரும் கணிக்கின்றனர். அதே நேரம் வரலாறு இந்தியாவுக்கு எதிராக உள்ளது. கடந்த 70 ஆண்டுகளில் இந்திய அணி ஒருமுறை கூட டெஸ்ட் கிண்ணம் வென்றது கிடையாது.

**எதிர்பார்ப்பு எப்படி?**

சமீபத்திய தென்னாபிரிக்கா (1-2). இங்கிலாந்து (1-4) மண்ணில் இதுபோல பெரிய எதிர்பார்ப்புடன் சென்று கடைசியில் தோல்வியடைந்தது. ஹோலியை தவிர மற்ற இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் சொல்லிக் கொள்ளும்படி கிடையாது. லோகேஷ் ராகுல், முரளி விஜய், ரகானே ஏமாற்றி வருகின்றனர். ஒருநாள், 'ரி20' ல் மிரட்டும் ரோகித் சர்மா எப்படி செயல்படப் போகிறார் எனத் தெரியவில்லை. பிரித்வி ஷா காயம், ஷிகர் தவான் இல்லாதது, பொலபொலவென உதிர்ந்து விடும் 'ரொப் ஓர்டர்' வரிசையில் தற்போது ஆடுகளங்களும் இந்தியாவுக்கு சாதகமில்லாமல் உள்ளன. வழக்கமாக முதல் டெஸ்டில் திணறும் இந்தியா இம்முறை சிறப்பாக செயல்பட்டால் வெற்றிக்கு முயற்சிக்கலாம்.

**தவறு வேண்டாம்**

ஸ்மித், வோர்னர் என முன்னணி வீரர்கள் இல்லை என்பதால் அவுஸ்திரேலிய அணியை குறைத்து மதிப்பிடக் கூடாது. சொந்த மண்ணில் கடும் சவால் தருவர். துடுப் பாட்டம் சற்று பலவீனமாக இருந்தாலும் மிட்சல் ஸ்ரார்க், ஹேசல்வுட், கம்மி ன்ஸ் உள்ளிட்டோர் இந்திய வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பர்.

**யார் 'ரொப்'**

அந்நிய மண்ணில் சமீபத்தில் பங்கேற்ற 8 டெஸ்டில் ஹோலியை (8ல் 879 ஓட்டங்கள்) தவிர மற்றைய இந்திய துடுப் பாட்ட வீரர்கள் சிறப்பாக செயற்பட்டது இல்லை. முரளி விஜய், ரகானே, புஜாரா சொதப்பினர். லோகேஷ் ராகுல் மட்டும் இங்கிலாந்தில் ஒரு சதம் அடித்திருந்தார்.


அரைச்சதம் அடித்த மகிழ்வில் அசார் அலி

# அசார் அலி அரைச்சதம்

நியூசிலாந்துக்கு எதிரான அபுதாபி டெஸ்டில் பாகிஸ்தானின் அசார் அலி அரைச்சதம் கடந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன. முதலிரண்டு போட்டிகள் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. மூன்றாவது டெஸ்ட் அபு தாபியில் நடக்கிறது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில், நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 7 விக்கெட்டுக்கு 229 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று 2ஆம் நாள் ஆட்டம் நடந்தது. வோட்லிங் அரை சதம் கடந்தார். பிலால் ஆசிப் 'சுழலில்' சோமர்வில்லி (12), போல்ட் (1) சிக்கினர். நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 274 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் அதிகபட்சமாக பிலால் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ஹபிஸ் (0), இமாம் (9) ஏமாற்றினர். பின், இணைந்த அசார் அலி, ஹரிஸ் சொகைல் பொறுப்புடன் விளையாடினர். மூன்றாவது விக்கெட்டுக்காக 68 ஓட்டங்கள் சேர்த்தபோது, ஹரிஸ் (34) ஆட்ட மிழந்தார். அசார் அலி அரைச்சதம் கடந்தார்.

ஆட்ட நேர முடிவில், பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்கள் எடுத்து 135 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. அசார் அலி (62), சபிக் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் போல்ட் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

# 'ஆஹா ஓஹோ...' மட்ரிச்

## பாலன் டி ஆர் விருதை சுவீகரித்தார்

சிறந்த கால்பந்து வீரருக்கான 'பாலன் டி ஆர்' விருதை தட்டிச் சென்றார் குரோஷிய அணித் தலைவர் லூகா மட்ரிச். கடந்த 10 ஆண்டுகளாக நீடித்த மெஸ்சி, ரொனால்டோ ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

பிரான்ஸ் கால்பந்து பத்திரிகை சார்பில் சிறந்த ஐரோப்பிய வீரருக்கான 'பாலன் டி ஆர்' விருது 1956 முதல் வழங்கப்பட்டது. 1995 முதல் ஐரோப்பிய கழக போட்டிகளில் பங்கேற்ற மற்றைய அணி வீரர்களுக்கும் கொடுக்கப்பட்டது. 2007 முதல் உலகளவில் மாறியது.

2010 முதல் 2015 வரை சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு ('பிபா') இணைந்து விருது வழங்கினர். ஒப்பந்தம் முடிந்த நிலையில் 2016 முதல் பிரான்ஸ் தனியாக 'பாலன் டி ஆர்' (தங்க பந்து) விருது வழங்குகிறது.

இந்த ஆண்டுக்கான 'ரொப் 10' பட்டியலில் கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்), மெஸ்சி (ஆர்ஜென்ரீனா), உலகக் கிண்ண தொடரில் அசத்திய மபே (பிரான்ஸ்), லூகா மட்ரிச் (குரோஷியா) உள்ளிட்டோர் இடம்பெற்றனர்.

உலக கால்பந்து அணிகளின் தலைவர்கள், முன்னணி பத்திரிகையாளர்கள் வாக்கு அளித்து சிறந்த வீரர் தேர்வு செய்யப்படுவார். குரோஷிய அணி உலக கிண்ண இறுதிக்கு முன்னேற உதவிய அணித் தலைவர் லூகா மட்ரிச் (வயது-33), மொத்தம் 753 புள்ளிகள் பெற்று 'பாலன் டி ஆர்' விருதை தட்டிச் சென்றார். ஏற்கெனவே உலக கிண்ணத் தொடரில் சிறந்த வீரராக தேர்வு பெற்றிருந்தார்.


பாலன் டி ஆர் விருதுடன் லூகா மட்ரிச்

கடந்த 2008 முதல் தலா ஐந்து முறை இவ்விருது வென்ற ரொனால்டோ (2008, 2013-14, 2016-17), மெஸ்சிக்கு (2009-12, 2015) இம்முறை இரண்டு, ஐந்தாவது இடம் மட்டும் தான் கிடைத்தது.

முதன் முறையாக வழங்கப்பட்ட சிறந்த வீராங்கனை விருதை நோர்வேயின் அடா ஹெஜர்பெர்க் (வயது-23), தட்டிச் சென்றார். 21 வயதுக்குட்பட்ட வீரர்களில் சிறந்தவராக பிரான்சின் மபே தேர்வானார்.

**முதல் வீரர்**

கடந்த 2007ல் பிரேசில் வீரர் காகா 'பாலன் டி ஆர்' விருது பெற்றார். இதன்பின் தொடர்ந்து 10 ஆண்டுகள் மெஸ்சி, ரொனால்டோவுக்கு தான் இவ்விருது கிடைத்தது. 10 ஆண்டுக்குப் பின் முதன் முறையாக மட்ரிச் இவ்விருது வென்றார். தவிர இப்பெருமை பெற்ற முதல் குரோஷிய வீரர் இவர் தான்.

◈ பொபி சார்ல்டன் (1996, இங்கிலாந்து), ஜோகன் கிரப் (1974, நெதர்லாந்து), பாலோ ரோசிக்குப் (1982, இத்தாலி) பின், உலக கிண்ணம் மற்றும் சிறந்த வீரர் விருதை ஒரே ஆண்டில் தட்டிச் சென்ற நான்காவது வீரர் ஆனார் மட்ரிச்.

**சர்ச்சை**

'பாலன் டி ஆர்' விருதுக்கு மட்ரிச் தேர்வு செய்யப்பட்டதற்கு பலத்த எதிர்ப்பு எழுந்தது. ரொனால்டோ (இந்த சீசனில் 154 கோல்), மெஸ்சியை (148 கோல்) விட மட்ரிச் (3 கோல்) சிறந்தவரா என கால்பந்து உலகத்தில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

# நீதிமன்றத் தீர்ப்பை ஜனநாயக ரீதியாக அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## இராதாகிருஸ்ணன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்திற்குக் கிடைத்த நீதிமன்ற தீர்ப்பை ஜனநாயக ரீதியாக அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி வே.இராதாகிருஸ்ணன் எம்.பி.தெரிவித்துள்ளார்.



நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பமாக இந்த நீதிமன்றத் தீர்ப்பு அமைந்துள்ளது.

அதாவது அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட புதிய பிரதமர் உட்பட அமைச்சர்களின் நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தியமை. இது ஒரு நல்ல விடயம்.

இலங்கையில் நீதித்துறை சுயாதீனமாக இயங்குகின்றது என்பதற்கும் நாட்டில் நல்லாட்சி காரணமாக ஜனநாயகம் நிலைத்துச் செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

எனவே இந்த நாட்டில் ஜனநாயகம் காக்கப்பட வேண்டுமானால் பாராளுமன்ற தீர்ப்புக்களையும் நீதிமன்றத் தீர்ப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

இவ்வாறான நிலையிலேயே நாட்டில் நல்லாட்சி நிலைத்து நிற்கும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டியதும் அதனை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதும் கட்டாய மானதாகும்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

# விஜயதாஸவின் கருத்து அரசின் நிலைப்பாடில்லை

## வாசுதேவ எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

அரசாங்கத்தரப்பு பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று தீர்மானித்த பின்னரும் விஜயதாஸ ராஜபக்ஷ எந்த அடிப்படையில் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டார் என்று எங்களுக்கு தெரியாது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டது தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது.

அவர் எந்த நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்றும் தெரியாது. என்றாலும் அரசாங்கம் என்றவகையில் கூட்டுப்பொறுப்பை பாதுகாப்பது அவரின் கடமையாகும் எனவும் தெரிவித்தார். (இ-7)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1968 - 07 - 17



மறைவு 2016 - 11 - 27

திதி: 05.12.2018

யாழ்.ஆதியாமலை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர். சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)

ஆண்டிரெண்டு ஓடி மறைந்தாலும் ஆறமுடியவில்லை எம்மால்
இன்றும் உன் பிரிவால் எம் இதயம் கலங்குகிறது எம் குடும்ப குல விளக்கு அணைந்ததை
எண்ணி மெழுகாய் உருகுகிறோம் அளவில்லா அன்பையும் அளக்க முடியாத பாசத்தையும்
அளவில்லாமல் கொடுத்து விட்டு அரை வயதில் எங்கு தான் சென்றாயோ
உன் புன்சிரிப்பை கண்டு இனிமையான குரலைக் கேட்டு ஈராண்டு காலம் கலைந்து விட்டதே
காற்றுப் பெருவெளியில் உனைக் காணும் நாளுக்காய் காத்திருக்கும் நாம்
கடவுளை வேண்டுகின்றோம் ஆத்ம சாந்திக்காய்.

(6533)

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

தகவல்:
சுப்பிரமணியம் இராஜேஸ்வரி(சகோதரி)





இசைச்செம்மல், சுருதி,லய,ஞான,
விநோத சுரபி சங்கீத பூஷணம்

## எல். திலகநாயகம் போல்

அவர்களின்

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

எம்மினிய குருவே! ஒன்பது ஆண்டுகள் கடந்தனவோ
தம் இசையும், குரலும் என்றும் எம் காதுகளில் ஒலிக்கின்றன. தமக்கு இசையர்ப்பணம் நிகழ்த்த முடியாது
ஏங்குகின்றோம். தம் நினைவில் என்றும் நிலைத்திருப்போம்.தம் வாழ்த்தும், ஆசியும் எமக்கும், எம்
மாணவர்களிற்கும் என்றும் நிலைத்திட
இறைஞ்சுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(6677)

சோமராகம் இசைமன்றம்,
நல்லூர்.

தம் நினைவில்
மாணவி கலாவித்தகர் திருமதி.குமுதா உமாகாந்தன்


# இராசி பலன்

**மீனம்:** எதையும் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மேடம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வீண் பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ். | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி<br>இரவு 10.30 மணிக்கு<br>விருச்- சந் | | |
| சனி | சூரி, குரு | புத.<br>சுக், சந் | |

05.12.2018
கார்த்திகை 19,புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.07 மணிவரை
விசாகம் பின்னிரவு 4.48 மணிவரை
சுபநேரம் 4.46-6.16 மணிவரை
இராகுகாலம் 12.16-1.46 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** மனதில் நீண்டகாலமாக இருந்த பாரம் குறையும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சிக்கு கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும்.

**துலாம்:** நண்பர்கள் பக்கபலமாக ஒத்துழைப்பு வழங்குவர், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபடவேண்டிய நாள், குடும்பத்தில் நிலவிய முரண்பாடுகள் அகலும்.

**கன்னி:** விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி காணும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திருமண முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# 35 துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வரும், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமாகிய இம்மானுவல் ஆனல்டின் மாகாணசபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் கடந்த முதலாம் திகதி பாசையூர் கடற்கரை முன்றலில் வைத்து பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

சுமார் 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 33 பயனாளிகளுக்கான துவிச்சக்கரவண்டிகள் கையளிக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள் பலர் இவ் உதவித்திட்டத்தில் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கம்பரெலிய திட்டத்தில் முறைகேடு நடவடிக்கை எடுக்கக்கோரி மகஜர்



(யாழ்ப்பாணம்)

ரணில் தலைமையிலான நல்லாட்சிஅரசாங்கத்தால்முன்னெடுக்கப்பட்ட கம்பரெலிய நிகழ்ச்சித் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் 3 ஆம் திகதி உரும்பிராய் செல்லம்மா சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் வடமாகாண ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

வீதிகளைப் புனரமைக்கும் கம்பரெலிய திட்டத்தில் வீதிகளைத் தெரிவு செய்யும் போது பாரபட்சம் காட்டப்பட்டதாகவும் தமது செல்லப்பா சனசமூக நிலையத்தை சார்ந்த வீதிகள் பல வருடகாலமாக புனரமைக்கப்படாமல் இருக்கும் நிலையில், ஒரு வீதிக்கு மட்டுமே 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கியதாகவும் இந்நிதியை வைத்து வீதியை முழுமையாக புனரமைக்க முடியாதென்றும் 15 வீடுகளுடன் நிறைவடையும் பாதைக்கு ரூபா 20 இலட்சம் ஒதுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமக்கான நீதியைப் பெற்றுத்தர வலியுறுத்தி செல்லப்பா சனசமூக நிலையநிர்வாகத்தினரால் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரின் செயலாளர் இ.இங்கோவனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (இ)

# கைவினைப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் கைவினைப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளை 6 ஆம் திகதியும் மற்றும் 7,8 ஆம் திகதிகளிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்.ஜெய்ப்பூர் நடமாடும் உபகரண உற்பத்திப் பிரிவு வளாகத்தில் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், கௌரவ விருந்தினராக யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# நாவலர் விடயத்திறன் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி வென்றது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் கரிகணன் பதிப்பகமும் இணைந்து நடத்திய நாவலர் விழாவையொட்டி பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட நாவலர் விடயத்திறன் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடத்தை உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர் அணியும் மூன்றாம் இடத்தை வட்டு. இந்துக் கல்லூரி மாணவர் அணியும் பெற்றுக்கொண்டன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வெற்றிக் கேடயங்களையும் மற்றும் புத்தகப் பொதிகளையும் கடந்த சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவின் போது யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்கிக் கௌரவித்தார். (இ-7)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு யாழில் விசேட செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

திட்டமிடல் செயலகத்தின் பங்களிப்புடன் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் ஏற்பாட்டில் யாழ். யு.எஸ் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு இடம் பெற்றது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 வரை இடம் பெற்ற இந்தச் செயலமர்வில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுலாக்கல் தொடர்பான தெளிவூட்டல்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. (இ-30)

# வயல்களில் வெடிபொருட்கள்



(பொற்பதி)

யாழ்.வடமராட்சிக்கிழக்கு மண்டலாய் பிள்ளையார் ஆலயம் தொடக்கம் இயக்கச்சி வாடியடி புளியடி சந்தி வரைக்கும் மக்கள் காலபோக வயல் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தம் முடிந்த பின்னர் இவ் வருடமே இந்தப் பிரதேசத்திலுள்ள வயல் நிலங்களில் இருந்த வெடிபொருட்கள் மற்றும் மிதி வெடிகள் அகற்றப்பட்ட நிலையில் மக்கள் பெருமளவான காணிகளில் காலபோக வயல் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வயல் நிலங்களில் வெடிக்காத நிலையில் பல்வேறு வெடிபொருட்கள் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தமது கண்களுக்கு தென்படும் வெடிபொருட்களை இராணுவத்தின் உதவியோடு அல்லது கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் உதவியோடு அகற்றி வருவதாகவும் தெரிவித்தனர். (இ-64)

# உணவுப் பொருட்கள் வழங்கல்




(கரணவாய்)

கஜா புயலால்பாதிக்கப்பட்ட கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொது மக்களுக்கு ஞானம் பவுண்டேஷன் நிறுவனத்தினால் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் நுளம்பு வலை உள்ளிட்ட பொருட்கள் நேற்று முன்தினம் கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. (இ-60)

# முன்னாள் போராளிக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மந்துவில் கிழக்குப் பகுதியில் வசிக்கும் முன்னாள்போராளியின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் "கனடா வாழ் எங்கள் மக்கள்" தொண்டர்அமைப்பினால் ஒரு இலட்சத்து 10 ஆயிரம்ரூபா நிதிகடந்த வாரம் வழங்கப்பட்டது. (இ-9)



யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 24 ஆம் திகதி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் திருமதி ரம்மியா நிரஞ்சன் (பழைய மாணவி), சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) ப.சசிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்ய முன்வருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதனை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபை உள்ளூர் முதலீட்டாளர்கள் கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்ய முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் கைத்தொழில் முயற்சியாளர்களை முதலீடு செய்ய ஊக்குவிக்கும் முகமாக கைத்தொழில் அபிவிருத்தி சபையானது தொழிற்றிட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

அதாவது காணியை பெற்றுக்கொடுப்பதுடன் கைத்தொழிற்பேட்டையில் தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான மின்சார இணைப்பு, நீர்வசதி, உள்ளகவீதி, 24 மணிநேரமும் செயற்படும் பாதுகாப்பு சேவைகள் மற்றும் வடிகாலமைப்பு போன்ற உட்கட்டுமான வசதிகளை வழங்கி வருகிறது. வங்கியிலிருந்து இலகு கடனைப் பெறுவதற்காக இயந்திரங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கொடுத்துள்ளது.

அத்துடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு கைத்தொழில் முயற்சியாளர்களின் மாதாந்த மின்சாரக் கொடுப்பனவில் 50 வீதத்தினை கைத்தொழில் அபிவிருத்தி சபையானது கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு மானியமாக மீளளிப்பு செய்யவுள்ளது. இது கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு அரிய வாய்ப்பாக அமைகின்றது.

ஆகவே உள்ளூர் முதலீட்டாளர்கள் கைத்தொழிற் பேட்டையில் முதலீடு செய்வதற்கு முன்வருமாறு அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது. (இ-9)

# முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால் மடம் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் வருடாந்தக் கலைவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கில் அறிவொளிசனசமூகநிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட பிராந்திய சத்யசாயி சர்வதேச நிறுவனத் தலைவர் வை.சிவநேசன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை War Child சிரேஷ்ட செயற்றிட்ட அதிகாரி க.கபிலன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் எம்.எம்.எம். நிபாஹிர், ஜே/88 புதிய சோனக தெரு கிராம உத்தியோகத்தர் திருமதி.சோ.பகீரதன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் ம.ரவீஸ்வரன், யாழ். கொக்குவில் மேற்கு சி.சி.ரி.எம்.பாடசாலை ஆசிரியர் திருமதி உதயரேகா அனுராஜ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சு.ஜெயகலா, யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஜெகதாரணி சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# காளான் உற்பத்தி மேலும் விரிவுபடுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விவசாயத்துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் விவசாயிகளிடத்தில் காளான் உற்பத்தி மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்தில் காளான் உற்பத்தியில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வழியாக இந்த உற்பத்தி காணப்படுகிறது.

இந்த வருடம் 40 பேர் வரையில் காளான் உற்பத்தியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதுடன் புதிதாக 10 பேர் இணைத்து கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி விவசாயத் திணைக்களத்தில் வழங்கப்படுகிறது.

மேலும் காளான் உற்பத்தியில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தில் அதிகளவு வருமானத்தை ஈட்ட முடியும் என்பதால் இதில் இணைந்து கொள்ள விரும்புகிறவர்கள் விவசாய திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

கரணவாயைச் சேர்ந்த யோசப் பிரான்சிஸ் கடந்த 28 ஆம் திகதி பருத்தித்துறை நீதிபதி பி.சிவக்குமார் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார்.

இவர் தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை அபிவிருத்தி உறுப்பினரும் நெல்லியடி சனசமூக நிலைய அறக்கொடை அமைப்பின் உறுப்பினருமாவார். (இ-5-60)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருவாளர்

**செல்லன் கனகசபை**

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி நாடக மன்றத்தின் எமது சக நடிகன் திருவாளர் **செல்லன் கனகசபை** அவர்களுக்கு நல்லூர் பிரதேச செயலகம் கலை பண்பாட்டுப் பேரவையினால் கௌரவ **"கலைஞானச் சுடர்"** என்னும் விருது வழங்கியமை இட்டு மேலும் பல விருதுகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்

மனமார வாழ்த்துபவர்

கலாபூஷணம் கயிலாயபிள்ளை சந்திரகுலசிங்கம்,

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

(6676)


# தளபாடங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவிலுள்ள பொது அமைப்புக்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரால் அலுவலகத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தின் பொது அமைப்புகள் தமது செயற்பாடுகளுக்கு தேவையான உதவிகளை பெற்றுத் தருமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கிழக்கு பிரதேச நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இவ் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள கட்டைக்காடு சென்மேரிஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிழல் பிரதி இயந்திரமும் வெற்றிலைக் கேணி ரம்போ விளையாட்டுக் கழகம், வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம், உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அலுவலக தளபாடங்களும், மைதான புனரமைப்பிற்காக கேவில் வெண்நிலா விளையாட்டுக் கழகத்திற்கு நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகளுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளரும் கட்சியின் வடமராட்சி, தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு உதவித்திட்டத்தை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-64)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை



**பு.ரிபின்சாஜினி**
**169 புள்ளிகள்**



**சு.டிலக்சிகா**
**166 புள்ளிகள்**



**திருமதி.ய.பிரதீபன்**
**(வகுப்பாசிரியா)**

**2018 நடைபெற்ற தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையில், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களையும் இவர்களை பொறுப்பேற்று நெறிப்படுத்திய ஆசிரியர் திருமதி.யமுனா பிரதீபன் அவர்களையும் 05.12.2018 புதன்கிழமை இன்று எமது பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் நெஞ்சார வாழ்த்துகின்றோம்.**

**சாதனைகள் தொடரட்டும் நம் பாடசாலை உயரட்டும்**

பாடசாலைச் சமூகம்

யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

(C-4601)


# நிறுத்தி வைக்கப்பட்ட ஆட்டோ காணாமல் போயுள்ளது

## பொலிஸில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா, கொரவப்பொத்தானை வீதியின் இலுப்பையடி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ ஒன்று காணாமல் போயுள்ளதாக அதன் உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆட்டோவில் திருகோணமலை சென்ற உரிமையாளர் இரவு 11 மணியளவில் வவுனியாவிற்கு மீண்டும் வந்ததுடன் இலுப்பையடிபகுதியில் உள்ள அவரது வர்த்தக நிலையத்திற்கு முன்பாக ஆட்டோவை நிறுத்தி விட்டு வர்த்தக நிலையத்தில் உறங்கியுள்ளார்.

மறுநாள் காலை 5 மணியளவில் எழுந்து பார்த்தபோது ஆட்டோ காணாமல் போனமை தெரியவந்துள்ளது. அதன் அனுமதிப்பத்திரங்கள், திறப்பு போன்றன உரிமையாளரிடமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.


சம்பவம் தொடர்பாக வவுனியா தலைமை பொலிஸ் நிலையக் குற்றப்பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# நெற்பயிர்ச் செய்கையில் எரிபந்தத்தின் தாக்கம்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் எரிபந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் விவசாயிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இலைப்பரப்பினில் பங்கஸின் தாக்கம்



கழுத்துப்பகுதியில் பங்கஸின் தாக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் எரிபந்தநோயின் தாக்கமானது முரசுமோட்டை, திருவையாறு, புளியம் பொக்கனை, பூநகரி நல்லூர்போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய வயல் நிலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எரிபந்தநோயின் தாக்கம் நோய்க் காரணி—பங்கஷ் (*Magnaporthe grisea*)

ஆரம்பத்தில் இலைபரப்பில் இரண்டு பக்கமும் ஒடுங்கிய நடுவில் அகன்ற கண் போன்ற புள்ளிகளாக காணப்படும். புள்ளியின் நடுப்பகுதியில் நரை அல்லது வெள்ளை நிறமாகவும் ஓரங்களில் கபில அல்லது சிவப்பு கலந்த கபில நிறமாகக் காணப்படும். பயிரின் எல்லா பருவ நிலையிலும் மற்றும் இலை, இலை மடல், தண்டு, கணுக்கள் தானியம் உட்பட எல்லா பாகங்களிலும் தாக்கத்தினை ஏற்படுத்தவல்லது.

இலைகளில் தாக்கம் ஏற்படும் போது புள்ளிகளாக உருவாகி பின்னர் படிப்படியாக பெருத்து இலைகள் காய்ந்து செல்லும். தண்டுப் பகுதியில் தாக்கம் ஏற்படும் போது தண்டு மடிந்து பயிர் சரியும். கணுக்களில் உருவாகும் போது அவ்விடம் சுருங்கி முறியும். கதிர் வெளிவரும் போது கழுத்துப் பகுதி சுருங்கி நலிவடைந்து கதிர் முறிவடையும் நிலை ஏற்படும். தானியம் நிரம்பாது சப்பியாக காணப்படும். இதனையே கழுத்துஎரிபந்தம் என்பர். தற்போது நிலவும் மப்பும் மந்தாரமான காலநிலை பங்கஷின் தாக்கம் விரைவாக பரவலடைய சாதகமாக அமைந்துள்ளது. குறைந்த வெப்புநிலை, கூடிய சாரீரப்பதன், நீண்ட பனிக்காலம் போன்ற நிலைமைகளும் இதன் தாக்கம் அதிகரிக்க வழிவகுக்கும். எனவே விரைந்து கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

புல்லினக் களைகளான ஆணை அறுகு நெற்சப்பி காணப்படுமிடங்களிலும் இத்தாக்கம் அதிகமாக காணப்படுவதனால் வயலுக்கு அண்மையிலுள்ள புல்லினங்களை கட்டுப்படுத்துவதுடன் அவற்றிற்கும் பங்கஷ் நாசினிகளை விசிறவும்.

யூரியா பசளையினை இலைநிற அட்டவணைக்கேற்ப பிரித்து பகுதி பகுதியாக இடவும். நோய்த்தாக்கம் அவதானிக்கப்பட்டிருப்பின் கீழ்வரும் பங்கஷ் நாசினிகளில் ஏதாவதொன்றினை சிபாரிசிற்கமைவாக விசிறவும்.

| பங்கஸ் நாசினிகள் | வர்த்தகப்பெயர் | கலவை அளவு 16லீற்றர் நீர் தாங்கிக்கானது | ஏக்கருக்கு விசிற வேண்டிய அளவு |
|---|---|---|---|
| றெபியுக்கொனசோல் | பொலிகர் | 10ml | 80ml-90ml |
| காபென்டசிம் | காபென்டசிம் | 12g | 90g-110g |
| றைசைக்கிளசோல் | குரு | 10g | 80g-90g |

இவ்வகையான நோய்த் தாக்கம் காணப்பட்டிருப்பின் பாதிக்கப்பட்ட வயலில் இருந்து விதைநெல் பெற்றுக் கொள்வதை தவிர்க்கவும். மேலும் குறித்த இனத்தை அதே வயலில் விதைக்காது எரிபந்த நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட நெல் இனங்களான Bg366, Bg 359, Bg352 போன்றவற்றை விதைக்கவும். நோய்த் தாக்கத்திற்குட்பட்ட வைக்கோலை ஆழமாக உழுது புதைக்கவும். பாதி கருக்கிய உமியை (250 kg/ac) நிலப் பண்படுத்தலின்போது சேர்க்கவும்.

விவசாயத் திணைக்களத்தினரால் சிபார்சு செய்யப்படாத நெல்லினங்கள் ஆட்டக்காரி உட்பட விதைப்பதை தயவுசெய்து தவிர்த்துக் கொள்ளவும். ஆட்டக்காரி போன்ற இனங்கள் இலகுவில் குறித்த நோய் தாக்கத்திற்குட்படுவதனால் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு அருகிலுள்ள நெல்வயல்களுக்கும் இலகுவில் பரவலடைகின்றது.

மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியரை அணுகவும். அல்லது அலுவலக நாட்களில் மாவட்ட அலுவலக தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும் 021 228 5726, 077 789 8271. (2)

---

க.பொ.த(சா/த) பரீட்சைக்கு

# 6 ஆயிரத்து 857 பரீட்சார்த்திகள் வவு.மாவட்டத்தில் தோற்றுகின்றனர்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சை 2018 இற்கு ஆறாயிரத்து 857 மாணவர்கள் தோற்றுகின்றனர் என வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை குறித்துவினவிய போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,




வவுனியா மாவட்டத்தில் இம்முறை மூவாயிரத்து 622 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாகவும், மூவாயிரத்து 235 பேர் வெளிவாரியாகவும் விண்ணப்பித்துள்ளனர். இதனடிப்படையில் ஆறாயிரத்து 857 பேர் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இம் மாணவர்கள் பரீட்சை எழுதும் வகையில் 51 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 14 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தவகையில் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2)

---

# 'இனியொரு யுத்தம் வேண்டாம்'

## சமாதானத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு



சமாதானத்தை எச் சந்தர்ப்பத்திலும் குழப்புவதை தவிர்க்க கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நாட்டில் தற்போது நிலவும் சமாதானமான சூழலை பேணுமாறு தெரிவித்தும், இனியொரு யுத்தம் வேண்டாம் எனத் தெரிவித்தும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் கிளிநொச்சி பொது சந்தைவரை முன்னெடுக்கப்பட்டு அங்கு கவனயீர்ப்பு போராட்டம்ஒன்றும்முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் சிவில் பாதுகாப்பு திணைக்கள உறுப்பினர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். இனியொரு யுத்தம் வேண்டாம் என கோசங்களும்இதன்போது எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் இனி ஒரு யுத்தம் எமக்கு வேண்டாம். நாம் நடைபெற்ற யுத்தத்தில் பல்வேறு உயிர்கள், சொத்துக்கள் என பல சந்தர்ப்பங்களில் இழந்துள்ளோம். அவ்வாறு இடம்பெற்ற யுத்தத்தில் நாம் எதையும் சாதிக்கவில்லை. இந்த நிலையில் தற்போது நாட்டில் உள்ள சமாதானமான சூழலை குழப்புவதற்கு சிலர் செயற்படுகின்றனர். அந்த வகையில்தான் மட்டக்களப்பில் பொலிஸார் மீதான துப்பாக்கி சூட்டு சம்பவம். இந்த பின்புலத்தில் முன்னாள் போராளிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டில் சமாதானமற்ற சூழலை ஏற்படுத்த முயற்சிக்க மாட்டோம். புனர்வாழ்வு பெற்று வந்த எம்மில் பலருக்கு இவ்வாறு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த சூழ்நிலையை பயன்படுத்தி சில அரசியல் கட்சிகள் முன்னாள் போராளிகள் ஒரு சிலரிற்கு பணம் கொடுத்து இவ்வாறுகுழப்பத்தைஏற்படுத்த முயல்கின்றது எனவும் அவர்கள்தெரிவித்தனர்.(2-315-312)

---

# உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கு பாதுகாப்புக் கடவை அமையுங்கள்

வவுனியா பன்றிக் கெய்த குளம் பகுதியில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைக்கு பாதுகாப்புக் கடவையிடுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பன்றிக் கெய்த குளம் பகுதியில் ஏ-9 வீதியிலிருந்து பன்றிக்கெய்தகுளம் குடியிருப்புக்குச்செல்லும் புகையிரதக்கடவைக்கு இதுவரை பாதுகாப்புக்கடவை இடப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதி ஊடாக மக்கள் உயிர் ஆபத்துடன் பயணிக்கின்ற ஓர் அபாய நிலை காணப்படுகின்றது. குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் புகையிரதத்தில்மோதுண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த நான்கு வயது மகனும் அவரது தந்தையும், உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை கடந்த செப்டெம்பர் 17ஆம் திகதி சிறிய ரக கார் ஒன்றில் பயணித்த யாழ்.நெடுந்தீவைச்சேர்ந்த மூன்று பெண்கள் புகையிரதத்தில்மோதி உயிரிழந்துள்ளனர். உழவு இயந்திரம் ஒன்று புகையிரதத்தில் மோதி இவ்வீதியில் விபத்துக்குள்ளானது. இவ்வாறு குறித்த வீதியில் ஏற்பட்ட விபத்துக்களால் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

எனவே இவ்வீதிக்கு பாதுகாப்புக்கடவை அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

---

# வவுனியாவில் வீடு புகுந்து திருட்டு- ஒருவர் கைதானார்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் அதிகாலை வேளை வீடு புகுந்து திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வீடு ஒன்றிற்குள் புகுந்து அங்கிருந்த தங்க நகைகள், ஒரு தொகைப் பணம் என்பனவற்றை திருடிய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் குறித்து மேலும் பொலிஸார் தெரிவிக்கையில்,

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியிலுள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த 12 பவுண் தங்க நகைகள், ஒரு இலட்சம் ரூபாய் பணம் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளார்கள். இதையடுத்து வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது வைரவப்புளியங்குளம் பகுதியிலுள்ள நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது மேலும் இத் திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை பொலிஸார் வலைவீசித் தேடிவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்துள்ளனர்.(2-281)

---

# கடற்றொழில் கிராமங்கள் அபிவிருத்தித்திட்டம் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும்

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தின் நான்கு மாவட்டங்களிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கடற்றொழில் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கடற்றொழில் திணைக்களம் மீள்குடியேற்ற அமைச்சு ஆகியவற்றின் ஊடாக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரைக்கும் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டமானது வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்,மன்னார் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் பள்ளிக்குடா, வலைப்பாடு, நாச்சிக்குடா ஆகிய கடற்றொழில் கிராமங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரணைப் பாலை, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, தீர்த்தக்கரை, சிலாவத்தை, கொக்கிளாய் ஆகிய கடற்றொழில் கிராமங்களும் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், சிறுத்தோப்பு, வங்காலை, அரிப்பு, கொண்டச்சிக்குடா, மன்னார்ப்பாடு ஆகிய கிராமங்களும் யாழ்.மாவட்டத்தில் முனை, ஆதிகோவிலடி, சாம்போடி, சுழிபுரம், அராலித்துறை, புங்குடுதீவு, தலைத்துறை உள்ளடங்கலாக 141 கிராம அலுவலர் பிரிவுகள் இதனுள் உள்வாங்கப்படுவதுடன் 15 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், 35 ஆயிரம் இளைஞர்-யுவதிகள், 15 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் இதன்மூலம் நன்மையடைவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நண்டு வளர்ப்பு, கடற்பாசி உற்பத்தி, அட்டை வளர்ப்பு, சிறு உற்பத்தி, தொழிற்சாலைகள், கடல் உணவு பதனிடல் போன்ற பல்வேறு தொழில்கள் இதன் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# கேரளக்கஞ்சாவை ஆடைக்குள் மறைத்து கடத்திய மூவர் கைது

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியாவில் கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போதை தடுப்பு பிரிவினரால் ஒரு கிலோ நிறையுடைய கேரளக்கஞ்சா நேற்றையதினம் கைப்பற்றப்பட்டது.

அதனை உடைமையில் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. யாழ்ப்பாணத்தில் யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்தை நொச்சிமோட்டை பகுதியில் வைத்து வழிமறித்த பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோதே குறித்த கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் கஞ்சாவை தமது ஆடைக்குள் மறைத்து வைத்து கடத்திச் சென்ற நிலையிலேயே அவர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதி மன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)




# 212 வீதிகளை புனரமைப்பதற்கு 382 மில்லியன் தேவையென மதிப்பீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமநலசேவை நிலையங்களுக்குச் சொந்தமான 212 வீதிகளையும் புனரமைப்பதற்கு 382 மில்லியன் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறுபட்ட திணைக்களங்களுக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வீதிகள் புனரமைக்கப்படாமையினால் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

குறிப்பாக, கமநல சேவை நிலையங்களில் அடங்குகின்ற விவசாய வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களின் கீழ் 212 வீதிகள் புனரமைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாகவும் இதற்கென 382 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# பனிக்கன்குளத்தில் புகையிரதத்தில் மோதுண்டு யானை உயிரிழப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பனிக்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தபால் புகையிரதத்தில் மோதுண்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த யானையை அகற்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பனிக்கன்குளம் கிராம அலுவலர் உள்ளிட்டோர் நடவடிக்கை மேற்கொண்டனர்.


கடந்த இரண்டு தினங்களாக பனிக்கன்குளம் பகுதியில் யானைகள் கிராமத்துக்குள் புகுந்து மக்களுக்கு பல்வேறு இன்னல்ளை கொடுத்துவந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு ஏழு மணி முதல் ஊருக்குள் புகுந்த யானைகள் மக்களுக்கு தொல்லை கொடுப்பது தொடர்பில் மக்களால் மாங்குளம் பொலிஸார் மற்றும் ஒட்டுசுட்டான் பிதேசசெயலாளர் ஊடாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் யானையை விரட்டுவதற்கு வருகை தராததால் யானை புகையிரதத்தில் மோதுண்டு இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரிகள் வந்து யானையை கலைத்திருந்தால் குறித்த யானை உயிரிழந்திருக்காது எனவும் குறித்த அதிகாரிகள் மீது குறித்த திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (2-281)

# இரணைமடு குளத்தினர் தற்போதைய நிலை தொடர்பில் அங்கஜன் நேரடி பார்வை





(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் அபிவிருத்தி தொடர்பில் அங்கஜன் இராமநாதன் பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் இரணைமடு குளத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி மற்றும் குளத்தின் தற்போதைய நிலை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், பொறியியலாளர் எஸ்.சுதாகரனிடம் குறித்த விடயங்களை கேட்டறிந்து கொண்டதுடன், இரணைமடு குளத்தின் கீழ்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையினால் பாதிப்பு ஏற்படுமா? அவர்களுக்கான மானிய உரம் வழங்க முடியுமா என்பது தொடர்பிலும் அவர் பொறியியலாளர் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருடன் அங்கு பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

இரணைமடுக் குளம் அபிவிருத்தி செய்யப்பட்டு தற்போது 34.5 அடிவரை நீர் தேக்கப்பட்டுள்ளதாகவும், இரணைமடு குளத்தில் இவ்வாறு அதிகளவான நீர் முதல் முதலாக தேக்கப்பட்டுள்ளமையையும் குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் 28 அடிவரையான நீரே தேக்கப்பட்டு வந்துள்ளதாகவும், இப்போது நீர் அதிகளவில் தேக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்தார்.

இதேவேளை தற்போது குளத்திற்கு நீர் படிப்படியாக வருகை தருவதாகவும், பொறியியலாளர்கள் குளத்தை அவதானித்து வரும் நிலையில் அடுத்துவரும் நாட்களில் வெள்ளம் ஏற்படா தவாறு குளத்திலிருந்து படிப்படியாக குளத்திற்கு ஆபத்தில்லாதவாறு நீர் வெளியேற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர்கள் அவதானித்து வருவதாகவும் இதன்போது குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் குடிநீர் மற்றும் விவசாயம் மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் அவரிடம் வினவியபோது,

இந்த அபிவிருத்தியின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கரிற்கு மேல் சிறுபோகம் செய்யக் கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும். இது வரை 8ஆயிரம் ஏக்கரே செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது அதிகளவான நீர் உள்ளதாகவும், விவசாயிகள் குளத்தின் நீரை பயன்படுத்தாது மழைநீரை பயன்படுத்தி செய்கை மேற்கொண்டுள்ளதால் அதிகளவான சிறுபோக செய்கை மேற்கொள்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழல் தொடர்பில் அவரிடம் வினவியபோது,

நான் இப்போது யாழ்ப்பாணத்தில் நிற்கின்றேன். இன்று கொழும்பு சென்று ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும், அதன் பின்னரே எவ்விடயமானாலும் முடிவெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்ட அவர், தற்போது தடை உத்தரவு மட்டுமே கிடைத்துள்ளது.

எது எவ்வாறாயினும் எமது கட்சி தலைமை எடுக்கும் முடிவினையே தானும் எடுப்பதாகவும் அவர் ஊடகங்களிற்கு தெரிவித்தார். (2-315)

# சொகுசு வாகனம் தடம்புரண்டு விபத்து; ஆறுபேர் படுகாயம்

## வவுனியாவில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

வவுனியா-திருகோணமலை வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் சொகுசு வாகனத்தில் பயணித்த ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹெப்பிட்டிக்கொலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சொகுசு வாகனம் ஹெப்பிட்டிக்கொலாவ பொலிஸ் பிரிவில் 13ஆம் கட்டைப்பகுதியில் மாலை அதிக வேகம் காரணமாக தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பயணம் மேற்கொண்டவர்களில் 6பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (2-281)

# முள்ளிப்பற்று அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலை ஏழு மில்லியன் ரூபா செலவில் அமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் உப அலுவலகமான முள்ளிப்பற்று அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலை என்பன ஏழு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் உபஅலுவலகமான முள்ளிப்பற்று ஆயுள்வேத வைத்தியசாலை நூலகம் ஆகியவற்றின் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதாவது. இப்பிரதேசத்தின் நலன்விரும்பியான சங்கரப்பிள்ளை என்பவர் நன்கொடையாக வழங்கிய காணியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் பிரதேச சபையின் நிதி என்பவற்றிலிருந்து ஏழு மில்லியன் ரூபா செலவில் குறித்த உப அலுவலகம், நூலகம், ஆயுள்வேத வைத்தியசாலை நூலகம் அடங்கிய கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன்கட்டுமானப்பணிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# சமூகசேவை திணைக்களத்தில் மாற்றுத்திறனாளிகள் நாள் நிகழ்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நாள் நிகழ்வு மாவட்ட சமூக சேவை திணைக்களத்தில் நடைபெற்றுள்ளது.


சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாளான நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகர், முள்ளியவளை ஆகிய பிரதேசங்களில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் கவனயீர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

அரசமற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை கவனயீர்ப்பு நடவடிக்கை மூலம் அறிந்து இறுதி கலந்துரையாடல் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் தசரத இராஜகுமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கட்டடங்கள் திணைக்களத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மு.விவேகானந்தன் . சிறப்பு விருந்தினர்களாக கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவராசா, புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன் இரு பிரதேசங்களிலும் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். (2-281)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மாதுளை





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தாவரவியற் பெயர்:- **Punica granatum**

குடும்பம்:-**Punicaceae**

மாதுளையை தாளமம், பீசமரம், மாதுளங்கம், மாதுளம், மாதுளுங்கம், கழுமுள் ஆகிய பெயர்கள் கொண்டும் அழைப்பர். இதில் இனிப்பு மாதுளை, புளிப்பு மாதுளை, பூ மாதுளை என்று மூன்று இனங்களுண்டு. இம்மரத்தின் தாயகங்கள் ஆப்கானிஸ்தானும் ஈரானுமாகும். இது வரட்சியை தாங்கி வளரும் மரமாகும்.

இதனுடைய பூ, பிஞ்சு, பழம், விதை, பட்டை அனைத்தும் மருத்துவ குண முடையவை.

"சங்கையறச் சொற்ற விர்க்குஞ் சண்ணியா சஞ்சர்த்தி யக்கையதி தாகம மைச்சாருமோ- கங்கை

இருந்தாடி மக்கட் கிரத் தலைச் செய் நோய்போம் இருந்தாடி மக்கனிகட் கெண்

வாய்நீரு நல்கசப்பு வாந்தி விக்கல் மந்தமிகக்

காய் வெப்பம் நெஞ் செரிவு காதடைப்பும்–ஓயா

மயக்கமுந் தீர்ந்து விடும் மாதுளம் பழத்தால்

தயக்கமறத் தேமொழியே! சாற்று

வெடித்து வீழ் பழத்தை வாங்கி மெல்லிய

சீலைகட்டி கடுக் னெகப் பிளிந்து கொண்டு கண்ட சர்க்கரையும் கூட்டிக் குடித்திட

வெடிப்பு மாறுங் குளிர்ந் திடும் அங்க மெல்லாம்

வடித்த நன்மொழி யினாலே! மாதுளம் பழத்தின் சாறே.

மாதுளம் பழத்தினால் முப்பிணி, சுரத்தில் காண்கின்ற வாந்தி நீர்வேட்கை இவைகள் போகும். பிள்ளை உண்டாகாமல் செய்கின்ற சூலக நோயைப் போக்கும். அன்றியும் வாய்நீர்ஊறல், விக்கல், மந்தம், வெப்பத்தால் உண்டான காய்ச்சல், நெஞ்செறிவு, காதடைப்பு, மயக்கம் இவைகளும் போகும். மேலும் உடல் குளிர்ச்சியடையும். மேற்கூறிய பண்புகளைப் பெறத் தானால் பழுத்து வெடித்த மாதுளையின் வித்துக்களை எடுத்து துணியிலிட்டு பிசைந்து சாறெடுத்து வேண்டிய அளவு கற்கண்டும் சேர்த்து உடனே குடித்தல் வேண்டும்.

பூ

வாந்தி பித்ததோட மொடு மாறாக் கடுப்பணவஞ் சேர்ந்து நின்ற மூலரத்தத் தீர்க் குங் காண்– மந்தளிர்க்கை

மாதே! யிரத்த புஷ்டி வல்லவலன் உண்டாகும்

பூதத்துள் மாதுளையின் பூ

இதனால் குருதி, வாந்தி, வயிற்றுக்கடுப்பு, வெப்பம், குருதி மூலம் போகும். குருதியை பெருக்கும். வன்மையைத் தரும்.

மாதுளம் பழத்தை ஒரு நாள் விட்டு ஒருநாள் அதிகாலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் எலும்பு, பற்கள் உறுதியாகும்.

மாதுளம் பழத்தை இரவு தூங்குவதற்கு 3 மணி நேரத்திற்கு முன் சாப்பிட்டு வந்தால் ஆண்மைக் குறைபாடு நீங்கும்.

மாதுளம்பழத் தோலைக் தண்ணீரில் ஊறவைத்து அந்தத் தண்ணீரால் மலம் கழித்த பிறகு ஆசன வாயைக் கழுவினால் மூலத்தால் ஏற்பட்ட புண் குணமாகி இரத்தக் கசிவும் நிற்கும்.

மாதுளம் பழத்தோலை நெருப்பில் சுட்டுப் பொடியாக்கி அதைக் கோதுமைச் சாதத்தில் கலந்து சாப்பிட்டால் வயிற்றுவலி குணமாகும்.

மாதுளம் செடியின் வேரை எடுத்து தண்ணீரில் போட்டுக் காய்ச்சிக் குடித்தால் வயிற்றிலுள்ள பூச்சிகள் ஒழியும். தினமும் ஒரு மாதுளம் பழத்தை இரவில் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் கு மாகும்.

மாதுளம் பழத்தை பிழிந்த சாறு 20 மில்லி, தேன் 20 மில்லி கலந்து குடித்து வந்தால் பித்தம் தணியும். மாதுளம் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும்.

மாதுளம் விதை உடலிற்கு ஊட்டத்தையும் ஆண்மையையும்தரும். விதையை பொடித்து 2 கிராம் அளவு 100 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து அருந்த இரத்தக் குறைவு நீங்கும்.

உலர்த்திய பழத்தோலுடன் ஒரேயளவு சாதிக்காய் பொடித்து சாப்பிட குருதி, சீதபேதி, வயிற்றுப் போக்கு நீங்கும். பழத்தோல், உப்பு ஆகியவற்றை இடித்து பல் துலக்கி வர பல்வலி குணமாகும். ஈறு உறுதியடையும்.

மாதுளம் பழத்தோலில் 2 கிராம் அளவு பசையாக அரைத்து தயிருடன் (50 மில்லி) அல்லது மோருடன் கலக்கி அருந்த வயிற்றுக் கடுப்பு, வயிற்றோட்டம் குணமாகும்.

இப்பழத்தோல், மங்குஸ்தான் பழத்தோல், பாலை மரப்பட்டை ஒவ்வொன்றும் 40 கிராம் எடுத்து 1400 மில்லி தண்ணீரில் போட்டு குடிநீர் செய்து 15-30 மில்லி கொடுக்க சீதக்கழிச்சல் போகும்.

மாதுளம் பிஞ்சினால் பல வயிற்றுக் கோளாறுகள் அகற்றப்படுகின்றன. மாதுளம் பிஞ்சை காரமில்லாத அம்மியில்வைத்துமைபோல அரைத்து மோர் அல்லது தயிர் கலந்து அருந்த குருதி, சீதபேதி, வயிற்றுப்போக்கு குணமாகும்.

மாதுளையின் காய்ந்த தண்டு, வேர்ப்பட்டைக் குடிநீர் நாடாப்புழுக்களைக் கொல்லும். வேர்க்குடிநீர் தொண்டைச் சுரப்பு, நாட்பட்ட வயிற்றோட்டம் ஆகியவற்றைக் குணமாக்கும்.

கசப்பு வகை மாதுளை வயிற்று நோய்களிற்கும் இதய வலிக்கும் உதவும். கசப்பு வகை மாதுளைச் சாற்றை கண் இமை, தலைமயிர் ஆகியவற்றில் சூடேறும் அளவிற்கு தினந்தோறும் ஓரிரு முறை தேய்த்துவர பூச்சி வெட்டினால் உண்டாகும் மயிர் உதிர்தல் குறையும்.

அறுகம்புல் சாறு, மாதுளம் பூச்சாறு ஆகியவற்றை சம அளவு கலந்து தினம் மூன்று வேளை அருந்திவர மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் நிற்கும்.

மாதுளம் பழச்சாற்றில் மெல்லிய புது வெள்ளைத் துணியை நனைத்து வெயிலில் உலர்த்தி இவ்வாறு 4 அல்லது 5 முறை நனைத்து உலர்த்திக் கொள்ளவும். இத் துணிச் சாம்பலை ஆமணக் கெண்ணெயில் குழைத்து கண்மையாக பயன் படுத்தினால் கண்ணுக்கு குளிர்ச்சி உண்டாகும். கெடுதல் எதுவும் உண்டாவதில்லை.

பூமொட்டுக்களை உலர்த்திப் பொடித்து 130 மி.கி தேனில் கொடுக்க இருமல் தணியும்.

வேர்ப்பட்டை ஒரு பங்கு, நீர் 20 பங்கு விட்டு சிறிது இலவங்கம் சேர்த்து 1/8 ஆக காய்ச்சிக் கொடுக்க தட் டைப்புழு விழும்.

இதனை 15-30 மில்லி வீதம் காலையில் வெறும் வயிற்றில் இரண்டு மணிக்கொரு தடவையாக ஆறு தடவை குடித்துக்கொண்டு வந்து கடைசித் தடவையில் கழிச்சலை உண்டாக்கும் மருந்துகளைக் கொடுக்க புழு வெளியாகும்.

சாதாரணமாக உங்கள் மனைகளில் ஆரோக்கிய மென்பானமாக பயன்படுத்தக் கூடிய மாதுளை மணப்பாகு

மாதுளம் பழச்சாறு- 1.400 மில்லி

மாச்சீனி-700 கிராம்

1.400 மில்லி மாதுளம் பழச்சாற்றில் 700 கிராம் மாச்சீனியை கரைத்து மேலும் காய்ச்சி மணப்பாகு பழத்தில் எடுத்து வடித்துக் கொள்ளவும்.

10-20 மில்லி காலை, மாலை நீர் 2 பங்கு கலந்து அருந்தவும். ஆரோக்கிய மென்பானமாக மட்டுமன்றி வாத, கப நோய்கள் இருமல், காய்ச்சல் இவைகளை போக்கும் ஆற்றலுண்டு.

## யாழ்.வட்டு இந்துக்கல்லூரி மாணவி தேசிய ரீதியிலான போட்டியில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான வருடாந்த பிரதீபா பிரபா போட்டியில் மேற்பிரிவில் தனி இசையில் தேசிய மட்டத்தில் யாழ்.வட்டு இந்துக்கல்லூரி மாணவி தனுஜா ஜெயராஜா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (இ)

## பேராசிரியர் கைலாசபதியின் 36வது நினைவுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழ் ஆய்வுத் துறையின் தலைசிறந்த ஆளுமையாகத் திகழ்ந்து ஈழத்திற்குப் பெருமை சேர்த்த பேராசிரியர் க.கைலாசபதியின் 36 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு எதிர்வரும் 09. 12.2018 ஞயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் நினைவுரையினை செவ்வியல் நூலாக தமிழ் வீரநிலைக் கவிதை என்ற தலைப்பில் ஆய்வாளர் ச.சத்தியதேவன் ஆற்றவுள்ளார்.

இந் நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு அமெரிக்க வர்த்தக சம்மேளனம் கவலை

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் நெருக்கடி நிலை காரணமாக நாட்டிற்கு கிடைக்க வேண்டிய முதலீடுகளிற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனம் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் அண்மையில் உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை குறித்து அமெரிக்க வர்த்தக சம்மேளனம் கவலை வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலை உள்ளூர் வெளிநாட்டு வர்த்தக சமூகத்தினரிற்கு கவலையை அளிக்கக் கூடிய செய்தியை தெரிவிக்கின்றது எனவும் அமெரிக்க வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் இதன் காரணமாக இலங்கையில் முதலீடு செய்யக்கூடியவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கரிசனை குறித்தும் அமெரிக்க வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடியுடன் தொடர்புடைய அனைவரையும் தேசத்தின் நலனை அடிப்படையாக வைத்து செயற்படுமாறு அமெரிக்க வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசத்தினதும் பொருளாதாரத்தினதும் நலனை கருத்தில்கொண்டு உடனடி தீர்வை காணுமாறும் அமெரிக்க வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

## முதியோர் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாவை கலட்டி இளைஞர்களும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகமும் இணைந்து நடத்தும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மாவை.கலட்டி கிராம அபிவிருத்திச் சங்க பொது நோக்கு மண்டபத்தில் மாவை கலட்டி இளைஞர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியரும் யாழ்ப்பாண றோட்டறிக் கழகத் தலைவருமான செ.பிரதாப், கௌரவ விருந்தினராக ஜே/225 கொல்லங் கலட்டி கிராம உத்தியோகத்தர் கு.துஷிகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## கோத்தாவுக்கு எதிரான வழக்கு மீது ஜனவரி 22 முதல் தொடர் விசாரணை

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனவரி மாதம் 22ஆம் திகதி முதல் தொடர் விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபாய் அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஏனைய பிரதிவாதிகளாக நில மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பிரசாத் ஹர்ஷன டி சில்வா மற்றும் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான பத்ரவதி கலதொட, சுதம்மிகா ஆட்டிகல்ல, சமன் குமார கலாபத்தி, டி. மெண்டிஸ் சலிய மற்றும் மல்லிகா குமாரி சேனதீர ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.(இ-7)

# ரணிலை பிரதமராக நியமிப்பதைத் தவிர ஜனாதிபதி மைத்திரிக்கு வேறு வழியில்லை

## கலாநிதி ஜயம்பதி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டு வரலாற்றில் ஜனாதிபதி விரும்பாதவருக்கும் பிரதமர் பதவியை வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அரசியலமைப்புக்கு ஏற்ப ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிப்பதைத் தவிர ஜனாதிபதி மைத்திரிக்கு வேறு வழியில்லையெனவும் ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதிக்கு அவருடன் வேலை செய்ய முடியுமா? இல்லையா? என்பது தனிப்பட்ட விடயம். சட்டரீதியில் ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இதற்கு முன்னரும் ஜனாதிபதிகள் தான் விரும்பாதவர்களுக்கு பிரதமர் பதவியை வழங்க நேரிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி டீ.பீ. விஜேதுங்க 1994 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகா குமாரதுங்கவை நியமித்துள்ளார்.

அதேபோன்று, சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருக்கும் போது 2004 இல் லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக நியமிக்க விரும்பிய போதிலும் அப்போது பாராளுமன்றத்தில் அதிகமானவர்களின் வரவேற்பைப் பெற்றிருந்த மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க நடவடிக்கை எடுத்தார்.

எனவே, ஜனாதிபதிக்கு இவ்வாறு தான் விரும்பாதவர்களை நியமிப்பதற்கு நிறையவே வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றன. இங்கு பார்க்கப்பட வேண்டியது பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்தையே அன்றி, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் அல்ல எனவும் கலாநிதி ஜயம்பதி எம்.பி மேலும் தெரிவித்தார். (இ-7)



அகில இலங்கை ரீதியில் கடந்த 30 ஆம் திகதி கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய ரீதியான பாடசாலைகளுக்கு இடையிலான "நாட்டார் குழு இசை போட்டி" சிரேஷ்ட பிரிவில் யாழ். வட்டு இந்துக் கல்லூரி மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

## பொதுத் தேர்தலை நடத்துமாறு சத்தியாக்கிரகப் போராட்டம்

(அம்பாந்தோட்டை)

பொதுத் தேர்தலை நடத்துமாறு அம்பாந்தோட்டை மாநகர சபை உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்களும் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை களஞ்சிய சாலை சந்தியில் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் நாட்டை பாதுகாக்கவும், தேசப்பற்றுள்ள தலைவர் ஒருவரை வேண்டியும் வழிபாடுகள் இடம்பெற்றதுடன் தேங்காய் உடைத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தும் வரையில் இந்த சத்தியாக்கிரக போராட்டம் தொடரும் என போராட்டத்தை ஆரம்பித்து வைத்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைக்கு சரியான தீர்மானமாகிய பொதுத் தேர்தலை நடத்தும் வரையில் நாட்டை வேலை நிறுத்தத்தில் ஈடுபட அம்பாந்தோட்டை மக்கள் தீர்மானித்துள்ளதாக அம்பாந்தோட்டை மாநகர சபை உறுப்பினர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## தோட்டத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தால் தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் பாதிப்பு

(ஹற்றன்)

மலையகம்எங்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களால் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதால் தேயிலை தொழிற்சாலையின் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தொழிலாளர்கள் அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுத் தருமாறுகோரி குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



இவ்வாறு தோட்டத்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதால் அங்குள்ள பெருமளவான தேயிலைத் தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் குறித்த ஆர்ப்பாட்டம் காரணமாக பெருமளவான தேயிலை தொழிற்சாலைகளின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.(இ-7)

## பட்டமளிப்பும் கலைவிழாவும்

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 9ஞானக்குழந்தை இல்லங்களும் இணைந்து நடத்தும் 53 ஆவது பட்டமளிப்பும் வருடாந்தக் கலைவிழாவும் இன்று 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் கவுஸ் கம்கிகா மண்டபத்தில் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக தொழில்நுட்பக் கல்லூரி ஓய்வு நிலைப் பணிப்பாளர் வெ. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (இ-5)

## உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அழைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, சட்டமா அதிபர் ஆகியோரை இம் மாதம் 7 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் தனியார் ஊடக நிறுவனமொன்றின் நிகழ்வில் கலந்துகொண்டு வெளியிட்டுள்ள தகவல்கள் நீதிமன்றத்தை அவமதிப்புக்குள்ளாக்குபவை எனக் குறிப்பிட்டு கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் உச்சநீதிமன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது.

பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்குட்படுத்தும் வகையில் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல்செய்து அதனை விசாரிப்பதற்கு ஐவரடங்கிய நீதிபதிகள் குழு நியமிக்கப்படுவதாகவும் எனினும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை தமது கட்சிக்கு உள்ளதாகவும் ரஞ்சன் ராமநாயக்க கூறியிருந்தார்.

மேற்படி கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு பிரதம நீதியரசர் உள்ளிட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு, ரஞ்சன் ராமநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்தது. (இ-7)



யாழ்.கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் அரும்பு இதழ் -02 சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் பிரிவுபசார வைபவமும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக நூலக இணைப்பாளர் திருமதி. சி.உருத்திரமூர்த்தியும் கௌரவ விருந்தினராக பழைய மாணவன் ஆ.கருணேஸ்வரனும் கலந்து சிறப்பித்தனர். அரும்பு இதழ் நூலின் முதற்பிரதியை பாடசாலை அதிபர் வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக் கொண்டார். அத்துடன் பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியை, தரம்-5 மாணவர்களுக்கான பிரிவுபசார வைபவமும் இடம்பெற்றன.

(படங்கள்:- சுபேசன்)

# பாரதம்

# பசுவதைக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை




(லக்னோ)

உத்தரபிரதேசத்தில் பசுவதைக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை வெடித்ததில் பொலிஸ் அதிகாரி உட்பட இரு இளைஞர்களுமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலம் புலந்த்சாகர் அருகே ஒரு கிராமத்தின் வயல்வெளியில், பசு மற்றும் கன்றுக்குட்டியின் உடல் பாகங்கள் சிதறிக்கிடந்தமைக்கு எதிராக, கிராம மக்களும், இந்து அமைப்பைச்சேர்ந்தவர்களும் பசுவை கொன்றவர்களை கைது செய்யக்கோரி நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பசு மற்றும் கன்றுக்குட்டியின் உடல்பாகங்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு, புலந்த்சாகரில் உள்ள நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், அவர்களை சமாதானப்படுத்த முயன்ற வேளை ஒரு கும்பல், பொலிஸாரை நோக்கி கற்களை வீசியதுடன் அருகில் இருந்த பொலிஸ் நிலையத்திற்கும், வாகனங்களுக்கும் தீவைத்தது.

நிலைமையை கட்டுப்படுத்த போலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து, கல் வீச்சு தாக்குதலும் அதிகரித்தது.

குறித்த கல்வீச்சு தாக்குதலில் பொலிஸ் உத்தியோத்தர் சுபோத் குமார் சிங், படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்த வேளை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை , பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

# பசுவதைக்கு எதிரான வன்முறை தொடர்பில் 4 பேர் கைது; 50 பேர் மீது வழக்கு

(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநிலம், புலந்த்சாகரில் நேற்று முன்தினம் நடந்த வன்முறையில் பொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டது, வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெயர் தெரிந்த 27 பேர் மீது முதல் தகவல் அறிக்கையும், அடையாளம் தெரியாத 50 பேர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புலந்த்சாகரின் சிங்கராவதி பகுதியில் உள்ள ஒரு வயல்பகுதியில் பசுமாட்டின் உடல்பகுதிகளும், கன்றுக்குட்டியும் கொல்லப்பட்டு இருந்தன. இதைப்பார்த்த ஒரு கும்பல் வீதி மறியலில் ஈடுபட்டனர். வீதி மறியலில் ஈடுபட்டவர்களைக் கலைக்க



வந்த பொலிஸார் மீது அந்த கும்பல் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது,

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள், லொறிகள், இருசக்கர வாகனங்களுக்குத் தீ வைத்து அந்தக் கும்பல் வன்முறை வெறியாட்டம் நடத்தினர்.

வன்முறை கட்டுக்கடங்காமல் போகவே பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அதேசமயம், வன்முறையாளர்கள் கல்வீசி நடத்திய தாக்குதலில், பொலிஸ் உத்தியோகத்தர் சுபோத்குமார் சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தார். இதையடுத்து வன்முறையில் ஈடுபட்டவர்களைப் பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது.

இந்த தனிப்படையினர் நேற்று முன்தினம் இரவு பெயர் தெரிந்த 27 பேர் மீது கொலை, வன்முறை ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தனர். மேலும், 50இற்கும் மேற்பட்ட அடையாளம் தெரியாத நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்தனர். இந்த வன்முறை தொடர்பாக பொலிஸார் இது வரை 4 பேரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது ஐ.பி.சி. 147,148, 149(வன்முறை செய்தல்), 332 (அரசு ஊழியரைப் பணி செய்ய விடாமல் தடுத்தல்), 353 (பணியின்போது அரசு ஊழியரைத் தாக்குதல்), 341 (சட்டவிரோத கூடுதல்), 302 (கொலை), 307(கொலை முயற்சி), 436 (தீ வைத்தல்) ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். (4-7)

# லொறி-பேரு

# 12 பேர் உ

(ஹராரே)

சிம்பாவே நாட்டில் கரும்பு ஏற்றிச்சென்ற லொறியும், தனியார் பேருந்தும் மோதிய விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை சிம்பாவே நாட்டின் தென் கிழக்கில் அமைந்துள்ள சிபிங்கே என்ற பகுதியில் கரும்பு ஏற்றி வந்த லொறியும், தனியார் பேருந்தும்மோதிக்கொண் டன.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 12 பேர் உடல்



# அமெரிக்க முன்னாள் ஜ இறுதி மரியாதை செலு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப்பும் அவரது மனைவி மெலனியா ட்ரம்ப்பும் மறைந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ்ஷுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

1924ஆம்ஆண்டுஜூலை



# மறைந்த அமெரிக்க இறுதி மரியாதை

(வோஷிங்டன்)

மறைந்த அமெரிக்க முன்னாள்ஜனாதிபதி ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ்ஸுக்கு ஜனாதிபதிக்கான சேவைப் பணியில் உள்ள நாய் தனது இறுதி மரியாதையை செலுத்தியது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் உடல்நலக் குறைவால் கடந்த சனிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 94.

ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ்ஷின் மறைவைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதிக்காக சேவைப் பணியில் உள்ள நாய் தனது இறுதி மரியாதை செலுத்திய புகைப்படத்தை முன்னாள் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜிம் மெக்ராத் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் உடன் முன் சேவை நாய் மிகுந்த சோகத்துடன் அப்புகைப்படத்தில் காணப்படுகிறது. தற்போது அந்தப் புகைப்படம்

# அமெரிக்க கார்கள் மீதான 40 சதவீதம் இறக்குமதி வரியை ரத்து செய்த சீனா

## ஜனாதிபதி ட்ரம்ப் மகிழ்ச்சி

(வோஷிங்டன்)


அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கார்கள் மீதான 40 சதவீதம் இறக்குமதி வரியை குறைக்கவும், ரத்து செய்யவும் சீன அரசு சம்மதித்துள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அந்நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பொருட்களுக்கான வரியையும், பிற நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியையும் பலமடங்காக உயர்த்தி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவால் சீனா-அமெரிக்கா இடையில் வரி



# ருந்து விபத்து உடல் சிதறி பலி!



சிதறி பரிதாபமாக பலியாகினர். இதுகுறித்து அக்கம்பக்கத்தினர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் உடனடியாக அங்கு விரைந்து வந்து விபத்தில் சிக்கியவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், பலர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் ·தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஒரு மாதத்தில் நடைபெற்ற மூன்றாவது பேருந்து விபத்து இதுவாகும். ஏற்கனவே, நவம்பர் 6ஆம் திகதி ருசாபே பகுதியில் நடைபெற்ற விபத்தில் 50 பேரும், நவம்பர் 15ஆம் திகதி மேற்கு நிக்கல்சன் பகுதியில் நடைபெற்ற பேருந்து விபத்தில் 42 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (4-7)

## 43 மாணவர்கள் மாயமான விவகாரம்

# விசாரணை செய்ய நீதி ஆணைக்குழு

(மெக்சிகோ)

மெக்சிகோவில் 43 மாணவர்கள் காணாமல் போன விவகாரம் தொடர்பாக விசாரணை செய்யும் வகையில் நீதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.



குறித்த நீதி ஆணைக் குழுவை அமைப்பதற்கான ஆணையில் மெக்சிகோவின் புதிய ஜனாதிபதி ஆன்ட்ரெஸ் மனுவெல் லோபஸ் ஒப்ரடோர் ஒப்பமிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக கடந்த சனிக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்ற ஒப்ரடோர், வாரத்தில் முதல் வேலை நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த ஆணையில் கையெழுத்திட்டுள்ளார்.

குறித்த ஆணையில் கையெழுத்திட்ட பின்னர் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கான அனைத்து தடைகளையும் தகர்த்தெறிவதாக வாக்குறுதியளித்தார்.

மேலும், நீதி ஆணைக் குழுவினால் இராணுவத்தினரும் விசாரணைக்கு உட்படுத்தப்படக்கூடும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தண்டனையிலிருந்து தப்பிப்பதை அனுமதிக்க முடியாது எனவும், ஏனைய வழக்குகள் போன்று தீர்வின்றி கிடப்பதை தாம் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆசிரிய பயிற்சி மாணவர்கள் கடந்த 2014ஆம் ஆண்டு இகுவாலா நகரில் வைத்து கடத்தப்பட்டு, பின்னர் பாதுகாப்பு படை உறுப்பினர்கள் எனக் கூறப்படுபவர்களால் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# ஜனாதிபதிக்கு லுத்திய ட்ரம்ப்



மாதம் 12 ஆம் திகதி மசட்ச் சூசஸில் பிறந்த ஜோர்ஜ் ஹெர்பர்ட் வோக்கர் புஷ், அமெரிக்காவின் 41 ஜனாதிபதியாக 1989 ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளதுடன், இருமுறை நாட்டின் துணை ஜனாதிபதியாகவும் சேவையாற்றியிருந்தார்.

இதனையடுத்து உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் 94 ஆவது வயதில் கடந்த வெள்ளிக் கிழமை உயிரிழந்தார்.

தற்போது அவரது சடலம் பொது மக்களின் அஞ்சலிக்காக வோஷிங்டனில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவரது சடலத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், அவரது பாரியார் மெலனியா ட்ரம்பும் நேற்று முன்தினம் சென்று தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

சுமார் அரை மணி நேரமாக அங்கிருந்த அவர்கள் பொதுமக்களிடமோ ஊடகங்களிடமோ எவ்வித கருத்துக்களையும் முன்வைக்காது அதன் பின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். (4-7)

# தலிபான்கள் சமரசத்தில் ஈடுபட உதவுமாறு பாகிஸ்தான் பிரதமர் இம்ரானுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடிதம்


(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு அமெரி க்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு கடிதம் எழுதியுள்ளார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், 'ஆப்கானிஸ்தானில் கடந்த 17 ஆண்டுகளாக தலிபான் பயங்கரவாதிகள் கொடூர தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் நமது இரு நாடுகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் உங்கள் (இம்ரான்கான்) பிரா ந்தியத்தில் முக்கிய பிரச்சினையாக உள்ள இதற்கு நீங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். எனவே தலிபான்கள் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு நீங்கள் ஆதரவு அளிக்கவேண்டும். சமாதான பேச்சுக்கும் உதவி செய்யவேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

அல்கொய்தா தலைவர் பின்லேடனுக்கு அபோதா பாத் நகரில் அடைக்கலம் கொடுத்ததை பாகிஸ்தான், அமெரிக்காவுக்கு செய்த துரோகம் என்று கடந்த வாரம் ட்ரம்ப் விமர்சித்து இருந்த நிலையில் இந்த கடிதத்தை எழுதி இருப்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# க முன்னாள் ஜனாதிபதிக்கு தை செலுத்திய பணி நாய்



சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜோர்ஜ் எச் டபிள்யூ புஷ் கடந்த 1989ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியில் இருந்தார். முன்னாள் ஜனாதிபதி ஜூனியர் புஷ்ஷின் தந்தை இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# நிலக்கரித் தொழிற்சாலைக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்




(போலந்து)

போலந்தில் பருவநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாடு நடந்து கொண்டிருக்கும் போது அந்நாட்டில் இயங்கும் நிலக்கரி தொழிற்சாலையை மூடும்படி ஆயிரக்கணக்கான மக்கள் பேரணி சென்றது உலக அளவில் கவனத்தைப் பெற்றுள்ளது.

போலந்து நாட்டில் ஐக்கிய நாடுகள் சபை சார்பில், பருவ நிலை மாறுபாடு குறித்த உச்சி மாநாடு நடைபெற்றது. சுமார் 200 நாடுகள் பருவ நிலை குறித்தான இந்த மாபெரும் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டன.

இந்த நிலையில் 50,000க்கும் அதிகமான போராட்டக்காரர்கள் புர்செல்ஸ் சாலையில் அந்நாட்டில் இயங்கும் நிலக்கரி தொழிற்சாலைக்கு எதிராகப் பேரணி சென்றனர்.

இந்தப் பேரணி குறித்து போலந்து பொலிஸார் தெரிவிக்கும்போது, "சுமார் 65,000 பேர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்ட மக்கள் பலர் "கார்களுக்குப் பதிலாக, சைக்கிள்களைப் பயன்படுத்துங்கள். நமது பூமியைப் பாதுகாக்கவும். நமது எதிர்காலத்தைப் பாதுகாக்கவும்" போன்ற பல பதாகைகளை ஏந்தி அமைதியாகச் சென்றனர்" என்று தெரிவித்தனர். போலந்து மக்களின் இந்த அமைதிப் பேரணியை பெல்ஜியம் பிரதமர் சார்லஸ் மைக்கேல் வலிமைமிக்க வெற்றி என்று பாராட்டியுள்ளார்.

போலந்து மக்கள் எதிர்க்கும் இந்த நிலக்கரி தொழிற்சாலை உலகிலேயே மிகப் பெரியது. இங்கு கிட்டத்தட்ட 5,472 மெகாவோட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து வருடத்துக்கு சுமார் 30,000 மில்லியன் டொன்கள் கார்பன்டை ஒக்ஸைடு வெளியிடப்படுவதாக சூழலியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (4-7)

விதிப்பு வர்த்தகப் போர் மூண்டது. சீனாவும் அமெரி க்கா மீது ஏராளமான வரிகளை அறிவித்தது. இதற்கு பதிலடியாக சீனா மீது பல்வேறு பொருட்கள் மீது சுமார் 20 ஆயிரம் கோடி டொலர்கள் மதிப்பிலான வரிகளை ட்ரம்ப் அண்மையில் சுமத்தினார்.

இந்த வரிவிதிப்பு அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அமுலுக்கு வரும் என்று அமெரிக்க அரசு அறிவித்திருந்தது.

அண்மையில் ஆர்ஜென்டீனா நாட்டில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டின்போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப்பை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையிலான வரிவிதிப்பு கொள்கை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்ததாகவும், இருநாட்டு தலைவர்களும் வரிகளை தளர்த்த சம்மதம் தெரிவித்ததாகவும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அமெரிக்கா, சீனா இடையிலான திருத்தப்பட்ட புதிய வரிவிதிப்பு கொள்கையை இறுதிசெய்ய மூன்று மாத (கருணை) கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கார்கள் மீதான இறக்குமதி வரியை ரத்து செய்யவும், குறைக்கவும் சீன அரசு சம்மதித்துள்ளதாக தனது டுவிட்டர் பக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்க கார்களுக்கு முன்னர் சீனா 40 சதவீதம் வரி விதித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

# “பிரதமர் யார் என்பதை தீர்மானிக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை”

## மகாநாயக்கர்களிடம் ஐ.தே.க.எடுத்துரைப்பு

(கண்டி)

பிரதமர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுள்ள அணியே பிரதமர் யார் என்பதைத் தீர்மானிக்கும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, பெரும்பான்மைக்கு இடமளித்தால் மாத்திரமே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைச் சீர்படுத்த முடியும். பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான வலியுறுத்தலை ஜனாதிபதிக்கு வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட குழுவினர் மகாநாயக்கர்களைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டியில் மகாசங்கத்தினரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்ததோடு, ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கெண்டனர்.

மேலும் இதன்போது தற்போது நாட்டில் காணப்படும் அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் மகா சங்கத்தினருக்குத் தெளிவுப்படுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, பாலித ரங்கே பண்டார, ஜெ.சி. அளுவத்துவ, தலதா அத்துகோரள மற்றும் சந்திராணி பண்டார உள்ளிட்டோர் இதன்போது கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே ரஞ்சித் மத்தும பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# புகையிரதத்துறையில் புதியதோர் மாற்றம்

(கொழும்பு)

இலங்கையின் புகையிரதத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இந்தியாவிலிருந்து 2 ரயில் இயந்திரங்களும் 11 ரயில் பெட்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 10 இயந்திரங்களும் புகையிரதப் பெட்டிகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளன. அதன் முதற்கட்டமாகவே இந்த இரண்டு இயந்திரங்களும் 11 புகையிரதப் பெட்டிகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.



மேலும் இரண்டாம் கட்ட இறக்குமதிப் பணிகள் அடுத்த வருடத்துக்குள் இடம்பெறவுள்ளதுடன், புகையிரதச் சேவையை இலகுபடுத்தும் விஸ்தரிக்கும் நோக்கில் எதிர்வரும் காலங்களில் 20 எண்ணெய்ப் புகையிரதங்களும் மற்றும் 20 கொள்கலன் புகையிரதங்களும் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அத்துடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் நவீன வசதிகளுடனான புகையிரதங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இந்த வகையில் சீன அரசாங்கத்திடமிருந்து 10 புகையிரதங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# பெரும்பான்மை உள்ளவர் கையில் அரசாங்கத்தை ஒப்படையுங்கள்

## வேலுகுமார் எம்.பி.வலியுறுத்து

(கண்டி)

பெரும்பான்மை உள்ளவர்கள் கையில் அரசாங்கத்தை ஒப்படையுங்கள். இல்லையேல் உங்களை வீட்டுக்கு அனுப்பும் ஜனநாயக சக்தியும் மக்கள் சக்தியும் எங்களிடம் இருக்கின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் மீண்டும் ஜனநாயகம் வெற்றி கொண்டுள்ளது. கடந்த ஒரு மாத காலமாக அரசியல் சூழ்ச்சியால் இந்த நாட்டின் அரசியல் நிலைமை மிக குழப்பகரமாகக் காணப்பட்டது.

இந்தச் சூழ்ச்சியில் முறையற்ற ரீதியில் இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அகற்றப்பட்டு புதிய பிரதமர் நியமிக்கப்பட்டார். அதன்பின் அரசியல் அமைப்பை மீறியதாக இந்த நாட்டின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கான வர்த்தமானியை முன்வைத்தார்.

இந்தப் பாராளுமன்ற கலைப்பு சட்டத்திற்கும் அரசியலமைப்புக்கும் முரணானது என மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்து அதற்கு நாங்கள் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றையும் பெற்று இந்த நாட்டினுடைய அரசியலமைப்பையும் ஜனநாயகத்தையும் நாங்கள் காப்பாற்றியுள்ளோம்.

நியமிக்கப்பட்ட பிரதமருக்கும் பிரதமரால் நியமிக்கப்பட்ட அரசாங்கத்திற்கும் எதிராக பாராளுமன்றத்தில் ஜனநாயக ரீதியாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நாங்கள் 122 உறுப்பினர்களின் பெரும்பான்மையால் நிறைவேற்றியுள்ளோம்.

இலங்கையின் சட்டத்திற்கு அமைய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்ததும் அவரின் கீழ் கொண்டு வந்த அமைச்சரவையும் சட்டத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றத்தில் அதை தடை செய்ய கூறி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்ததும் அரசாங்கத்தை உருவாக்கியதும் சட்டத்திற்கு முரணானது என மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்குப் போலியான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் கூற விரும்புவது என்னவென்றால், பெரும்பான்மை உள்ளவர்கள் கையில் அரசாங்கத்தை ஒப்படையுங்கள்.

இல்லையேல் உங்களை வீட்டுக்கு அனுப்பும் ஜனநாயக சக்தியும் மக்கள் சக்தியும் எங்களிடம் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆடுகளின் அறிவுரை

இராமாயணத்தில் கடைசியில் இராமருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது தானே, அதற்குப் பிறகு நடந்த ஒரு நிகழ்ச்சி இது! இராமர் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்.

அப்போது கைகேயி அம்மா ஒரு நாள் அவரைப் பார்த்துக் கேட்டாராம். “பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து நான் தவித்துக்கொண்டிருக்கிறேன். உன்னுடைய உபதேச மொழிகளைக் கேட்டுத்தான் நான் கரை சேரவேண்டும்!” என்றாராம். அதற்கு இராமர்,

“அம்மா! கவலைப்படாதீர்கள்! நாளைக்கு இலட்சுமணன் உங்களை அழைத்துக்கொண்டுபோய் உபதேசம் செய்து வைப்பான்!” என்றார்.

“தம்பி! நீ நாளைக்குக் காலையில் ஒரு காரியம் செய். நமது கைகேயி அன்னையைப் பல்லக்கில் ஏற்றி சரயு நதிக்கரைக்கு அழைத்துக்கொண்டு போ! அங்கே ஆட்டு மந்தைகள் இருக்கும். ஒரு முகூர்த்த நேரம் நமது அம்மா அந்த ஆடுகள் போடும் சத்தத்தைக் கேட்பது போல் செய்!” என்றார்.

சரி என்று சொல்லிட்டார் இலட்சுமணன். அடுத்த நாள் காலையில் அம்மாவை ஒரு பல்லக்கில் ஏற்றினார். சரயு நதிக்கரைக்கு அழைத்துக்கொண்டு போனார்.

அங்கே ஒரு ஆட்டு மந்தைக்குப் பக்கத்தில் பல்லக்கை இறக்கினார். அம்மா இறங்கி வெளியே வந்தார்கள். “அம்மா! இந்த ஆடுகள் ஒலிக்கிற ஒலியைத் தாங்கள் ஒரு முகூர்த்த நேரம் கேட்க வேண்டும் என்று இராமர் சொன்னார்!” என்றார்.

கைகேயி அந்த ஆடுகள் போடும் சத்தத்தைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்கள். அதெல்லாம் மே! மே! என்று கத்திக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்துக்கு எல்லாம் கைகேயி முகத்தில் ஒரு ஒளி தோன்றியது! அஞ்ஞானம் நீங்கி ஞானம் வந்தது போல் ஆகிவிட்டது!

உடனே இலட்சுமணனைப் பார்த்து “குழந்தாய்! மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு இராமன் எனக்கு உதவி செய்துவிட்டான். இனிமேல் நாங்கள் அரண்மனைக்குத் திரும்பலாம்!” என்றார்கள்.

மறுபடியும் பல்லக்கில் ஏறி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். வந்ததும் இராமர் அவர்களைப் பார்த்து “அம்மா! அந்த ஆடுகளின் ஒலியிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?” என்று கேட்டார்.

அதற்கு அவர் பதில் சொன்னார். “நான் ஆடுகளின் ஒலியைக் கூர்ந்து கவனித்தேன்! அதெல்லாம் மே! மே! என்று கத்திக்கொண்டிருந்தது!

“மே!” என்றால் “எனது” என்று அர்த்தம்! நாங்களெல்லாம் “எனது” “எனது” என்று சொன்னதனால் தான் இப்படி ஆடுகளாகப் பிறந்து தவிக்கிறோம்” என்று அந்த ஆடுகள் போதித்தது போல் நான் உணர்ந்தேன்!

இனிமேல் “எனது” என்று எதையும் சொல்ல மாட்டேன்! என்றார்கள். இராமர் சொன்னார்,

“அம்மா! ‘நான்’ என்னும் அகங்காரமும் “எனது” என்னும் மமகாரமும் தான் நம்மைப் படுகுழியில் தள்ளுகின்றன. தங்களுக்கு ஞானம் வந்து விட்டது.

நான் தங்களுடைய மகன் என்பதனாலே உபதேசம் செய்யும் உரிமை எனக்குக் கிடையாது. அதனால் தான் இப்படிச் செய்தேன்!” என்றார் இராமர்.

பார்த்தீர்களா? ஆடுகள் போடும் சத்தத்திலேயிருந்து கூட நாம் எவ்வளவு அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும் பாருங்க! சில பேர் குழந்தைகள் போடும் சத்தத்திலேயிருந்து கூட சில அர்த்தத்தைப் புரிந்து கொள்வது உண்டு.

ஒருத்தர் தன்னுடைய நண்பர் வீட்டுக்கு போனார். அங்கே ஒரு சின்னக் குழந்தை சத்தம் போட்டுக் கத்திக்கொண்டிருந்தது. உடனே இவர் அதைக் கூர்ந்து கவனித்தார். கைகேயி மாதிரி!


அதற்குப்பின்னர் சொன்னார், “சேர்! உங்க பையன் வருங்காலத்தில் சண்டை போடும் ஒரு பெரிய வீரனாக ஆயிடுவான் என்பதை இப்பவே என்னால் புரிந்துகொள்ள முடியுது! என்றார். “எப்படி சொல்றீங்க?” என்று கேட்டார் அவர்.

“கூர்ந்து கவனிங்க சேர் எப்படி கத்துகிறான் என்று வருங்காலத்தில் அவனுக்கு என்ன தேவை என்பதை இப்போதே சொல்லுகிறான். வாள்! வாள்! என்று கத்துகிறான் பாருங்க!” என்றார் இவர்.

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்

01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



1956 ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி 51 ஆசனங்களைப் பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 8 ஆசனங்களே கிடைத்தன.

பண்டாரநாயக்க இடதுசாரிக் கட்சிகளுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டதால் இடதுசாரிக் கட்சிகளுக்கு 17 ஆசனங்கள் கிடைத்தன. (லங்கா சமசமாஜ கட்சி 14 ஆசனங்கள், கம்யூனிஸ்ட் கட்சி 3 ஆசனங்கள்) இந்தத் தேர்தல் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் வெற்றிகரமான தேர்தலாக அமைந்தது. அதற்குக் காரணம் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் "சிங்கள-பௌத்த" தேசியவாதம் ஆகும்.

பண்டாரநாயக்கவினால் எழுச்சியுறச் செய்யப்பட்ட "சிங்கள-பௌத்த" தேசியவாதம், ஐக்கிய தேசியக் கட்சி தனது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிக் கொள்கையினின்று விலகி பண்டார நாயக்கவின் "தனிச் சிங்களக்" கொள்கையை தானும் ஏற்றமை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் ஐக்கிய தேசியக் கட்சியுடனான இணக்க அரசியல் என்பனவெல்லாம் சேர்ந்து தமிழ் மக்கள் இவற்றுக்கு மாற்றான தமிழ்த் தேசிய சக்தியாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சியைத் தெரிவு செய்வதற்கு ஏதுவான காரணிகளாக அமைந்தன.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மிகப் பெரியதொரு வெற்றியை ஈட்டியது. 14 வேட்பாளர்கள் போட்டியிட்டு 10 பேர் வெற்றியீட்டினர். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் ஜி.ஜி. பொன்னம்பலம் மட்டும் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றி "சிங்கள-பௌத்த" தேசியவாதத்துக்கெதிரான தமிழ் மக்களது உரிமைக் குரலாகப் பார்க்கப் பட்டது.

## பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் அமைச்சரவை

இலங்கையின் மூன்றாவது பாராளுமன்றத்தின் நான்காவது பிரதமராக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தெரிவு செய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர். என். எம். பெரேரா தெரிவுசெய்யப்பட்டார். மூன்றாவது பாராளுமன்றத்தின் அமைச்சரவையில் 14பேர் அமைச்சர்களாக இருந்தனர்.

இவ் அமைச்சரவையில் தமிழர்கள் எவரும் இடம் பெறவில்லை. மூன்றாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு தமிழர்களதும் முஸ்லிம்களதும் அமோக ஆதரவுடன் கல்முனைத் தொகுதியில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்ற எம்.எஸ் காரியப்பர் பாராளுமன்றம் சென்று ஆறு மாதத்தில் தமிழ் அரசுக் கட்சியை விட்டு விலகி அரசுடன் சேர்ந்து நீதி அமைச்சில் செயலாளர்/ கனிஷ்ட அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டார்.

அதேபோல் தமிழ் அரசுக் கட்சியில் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எம்.எம். முஸ்தபாவும் 1959இல் தமிழ் அரசுக் கட்சியை விட்டு விலகி அரசுடன் சேர்ந்து நிதி அமைச்சில் செயலாளர்/ கனிஷ்ட அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டார்.

தேர்தல் பிரசாரத்தில் அளித்த வாக்குறுதிக்கமைய பண்டாரநாயக்கவை பிரதமராகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டது. அவற்றுள் சில,

சிங்களமொழி அரசகரும மொழியாக மாற்றியது (1956), பஸ்சேவை (1958) மற்றும் கொழும்பு துறைமுகம் (1958) தேசியமயமாக்கியது, தொழிலாளர் தினம் (மேதினம்) விடுமுறையாக்கப் பிரகடனம் செய்தது (1956), ஊழியர் சேமலாபநிதிச் சட்டம் (EPF) (1958) கொண்டு வரப்பட்டது, திருகோணமலை கடற்படைத் தளத்தை பிரிட்டிஷாரிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது (1957), கட்டுநாயக்கவிலிருந்த விமான படைத்தளத்தை பிரிட்டிஷாரிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது (1957) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிரதமர் பண்டாரநாயக்க பௌத்த மத வளர்ச்சிக்காக கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற புதிய அமைச்சை ஏற்படுத்தினார். பௌத்த மடாலயத்தின் நீண்டகாலத் திட்டங்கள் பல இப்புதிய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் முக்கியமானவையாக புத்த ஜயந்தி குமாகார்த்த கட்டடங்கள் அமைத்தல், தலதா மாளிகையின் புனரமைப்பு, பௌத்த கலைக்களஞ்சியம், சிங்கள, பாளி திரிபீடகங்கள் என்பவற்றின் தொகுப்பும் பதிப்பும் போன்ற பல திட்டங்கள் காணப்பட்டன. கலாசார அமைச்சின் கீழே இந்து, முஸ்லிம் மத விவகாரங்களுக்கான ஆலோசனை சபைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவை மாற்றான்தாய் மனப்பான்மையுடனேயே கவனிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. பௌத்த நிகழ்ச்சித் திட்டங்கள் நேரடியாகவும் ஒழுங்காகவும் இவ் அமைச்சினால் நிர்வகிக்கப்பட்டன.

## இனவிரிசலை உண்டாக்கிய சிங்களம் மட்டும் சட்டம்

அன்றைய காலகட்டத்தில் சுமார் 65 வீதமானவர்கள் சிங்கள மொழியையும், 29 வீதமானவர்கள் தமிழ் மொழியையும் ஏனையவர்கள் வேறு மொழிகளையும் பேசுபவர்களாகக் காணப்பட்டனர். அத்துடன் நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் 1955 ஆம் ஆண்டு வரை இலங்கைத் தீவு முழுவதும் சிங்களமும், தமிழும் சம அந்தஸ்தைக் கொண்டிருந்தன.

இதனால் சிங்கள, தமிழ் மக்கள் தமது கருமங்களை ஆற்றிக் கொள்வதில் சமமான வசதிகளைக் கொண்டிருந்தனர். அத்துடன் மொழி தொடர்பான பிணக்குகளும் ஏற்படவில்லை.

இந்நிலையில்தான் பண்டாரநாயக்க இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஒன்று தனக்குக் கிடைக்குமாயின் கிடைத்து அடுத்த 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை இந்த நாட்டின் அரசகரும மொழியாக மாற்றிக் காட்டுவேன் என தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் அவர் சிங்கள மக்களின் மனங்களைக் கவரும் வகையில் ஆற்றிய உரையின் படி பிலிப் குணவர்த்தன போன்ற இனவாதிகளின் முழு ஒத்துழைப்புடனும் 8 ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடனும் தனிச் சிங்களச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறை வேற்றினார்.

இச் சட்டமூலம் 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட போது சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி என். எம். பெரேரா மற்றும் கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க போன்றவர்கள் சிங்கள மொழியைப்போன்று தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப்படல் வேண்டுமென வாதாடினார்கள். ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை.

தமிழ்க் கட்சிகளும் (இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) "தனிச் சிங்கள" சட்டத்தை கடுமையாக எதிர்த்தன.

பாராளுமன்ற விவாதத்தில் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா சிங்களம் மட்டும் சட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஒரு மொழி இரண்டு தேசங்கள். இரண்டு மொழிகள் ஒரு தேசம் என சுருக்கமாகக் கூறிச் சென்றார். (கொல்வினின் இந்தக் கூற்றை தமிழ் சமூகத்தினர் பாராட்டு கின்றனர். அதே கொல்வின் அரசியலமைப்புத்துறை அமைச்சராக இருந்த போதே 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்பு வரையப்பட்டது. அதனை வரைவதில் முன்னணியில் இருந்து உழைத்தவரும் அவரே. ஆனால் தாம் போதித்த அந்தக் கொள்கையை அந்த யாப்பு வரைவின் போது பின்பற்ற அவரே பின்வாங்கினார். அந்த யாப்பிலும் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. இதுவும் அரசியல் சந்தர்ப்பவாதமே.)

"தனிச் சிங்களச்" சட்டம் பற்றிப் பேசும் போது, "ஏற்கனவே இது இனக் கலவரத்தை உருவாக்கிவிட்டது. இந்தச் சட்டமூலத்தால் இனி வரும் காலங்களில் இன விரிசல் பல மடங்கு அதிகமாகும்.

(தொடரும்)



எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றல்

# யார் தலைமை தாங்கினாலும் மக்களுக்கு சார்பாக எதுவுமே இடம்பெறப் போவதில்லை

## சி.கா.செந்தில்வேல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிறைவேற்று அதிகாரத்தின் காரணமாக இலங்கையில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இடம்பெற்று வரும் பாராளுமன்ற அரசியல் நெருக்கடியானது ஆளும் வர்க்கத் தரப்புக்கள் தத்தமது அதிகாரத்திற்காகக் குண்டுச் சட்டிக்குள் குதிரையோடுவது போன்றதொரு செயற்பாடாகும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மறைந்த கே.ஏ.சுப்பிரமணியத்தின் நினைவுக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எழுபது வருடகாலப் பாராளுமன்ற ஆட்சியினாலும், நாற்பது ஆண்டுகால நிறைவேற்று அதிகார அரசியலமைப்பு முறையினாலும் தீர்க்க முடியாத பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு பிரச்சினைகளின் எதிர்விளைவே இன்றைய நெருக்கடிகளின் அடிப்படையாகும்.

1947 இன் சோல்பரி அரசியலமைப்பும், 1972 இன் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியலமைப்பும், 1978 இன் ஜே.ஆர். உருவாக்கிய அரசியலமைப்பும் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மைகளையோ சுபீட்சங்களையோ கொண்டு வரவில்லை. குறிப்பாக நாற்பது வருடகால நிறைவேற்று அதிகாரத்தின் கீழான பாராளுமன்ற ஆட்சிமுறையினால் பொருளாதார நெருக்கடிகளும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்மையால் போரும் அழிவுகளுமே எஞ்சி நிற்கின்றன.

அதேவேளை, போரின் மறைவில் தாராளமயமும் தனியார்மயமும் அந்நிய பல்தேசியக் கம்பனிகளும் தனியார் மூலதன முதலீட்டு ஆதிக்கங்களும் எமது தேசத்தில் நிலைபெற்றுக் கொண்டன. இவற்றை தெற்கின் இரண்டு பிரதான ஆளும் தரப்பு உயர்வர்க்க மேட்டுக்குடி கட்சிகளே மாறி மாறி ஆட்சி பீடத்தில் இருந்து முன்னெடுத்தன. அவர்களுக்கு அந்நிய வல்லரசு சக்திகள் வழிகாட்டி ஆலோசனை வழங்கி, பெருந்தொகை நிதியை வட்டியுடன் கூடிய கடனாகவும் கொடுத்தனர்.

அதனால்எமது நாடு இன்று பல பில்லியன் ரூபாய்களை அமெரிக்க டொலர்களில் மீளச் செலுத்த வேண்டிய நிலையில் இருந்து வருகிறது. ஏற்றுமதி குறைவடைந்து, இறக்குமதி அதிகரித்து, உற்பத்திப் பொருளாதாரம் வீழ்ச்சி பெற்று, நுகர்வு அதிகரித்துள்ளது. அதன் காரணமாகவே தற்பொழுது இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்து அமெரிக்க டொலரின் பெறுமதி 180 ரூபாவைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.

இவை அனைத்தினதும் சுமைகளையும் நெருக்கடிகளையும்நாட்டின் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களே சுமந்து நிற்க வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றுக்குப் பதில் கூறவோ, பொருளாதார கட்டமைப்பை மாற்றவோ, தற்போது அதிகாரத்திற்காகப் போட்டியிடும் எந்தவொரு தரப்பும் தயாராக இல்லை. அதேவேளை இன்று அரசியலமைப்பும் நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் தோல்வியடைந்து தம்மைத் தாமே நிர்வாணப்படுத்திக் கொண்டுள்ளன.

எனவே தோல்வியடைந்துள்ள மேற்படி முறைகளுக்கு யார் தலைமை தாங்கினாலும் மக்களுக்கு சார்பாக எதுவுமே இடம்பெறப்போவதில்லை. இவற்றை அரசியல் பொருளாதார அடிப்படையில் ஆழச் சிந்தித்துத் தூர நோக்கில் மக்களுக்கான மாற்று அரசியல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க மக்கள் முன்வர வேண்டும். மக்களுக்கான அரசியல் பொருளாதார வேலைத் திட்டங்களையும் பரந்த அடிப்படைகளில் முன் கொண்டு செல்ல மக்கள் தயாராக வேண்டும்.

இன்று ஜனநாயகம் என்ற சொல் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. ஆனால் இவர்கள் சொல்லும் இந்த ஜனநாயகத்தினால் உழைக்கும் மக்களோ ஒடுக்கப்படும் தேசிய இனங்களோ எவற்றையும் இதுவரை பெற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் இவர்களால் உரத்துக் கூறப்படும் ஜனநாயகம் முற்றிலும் முதலாளித்துவ மேட்டுக்குடி உயர்வர்க்கத்தினருக்கான ஜனநாயகமேயாகும். இதே ஜனநாயகத்தின் கீழேயே உழைக்கும் மக்கள் சுரண்டல், ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, வறுமை, இன முரண்பாடு உள்ளிட்ட வாழ்க்கை நெருக்கடிகளை அனுபவித்து வருகிறார்கள். தேசிய இனங்கள் மீதான இனமத பிரதேச ஒடுக்குமுறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே மக்கள் அதிகாரத்திற்கான, மக்கள் பங்குபற்றும் ஜனநாயகம் வென்றெடுக்கப்பட வேண்டும். ஆதலால் தமது அதிகாரத்திற்காகக் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் ஆளும் முதலாளியப் பேரினவாதக் கட்சிகளுக்கு அப்பால்,, உழைக்கும் மக்களுக்கான மாற்று அரசியல் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதையே இன்றைய அரசியல் நெருக்கடிகள் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

அதற்காக வெகுஜனப் போராட்ட பாதையில் பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மீண்டும் மீண்டும் பாழடைந்த பயனற்றுப் போயிருக்கும் பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கீழ் தெற்கின் உழைக்கும் மக்களுக்கும் எவ்வித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை. தெற்கே மேட்டுக்குடி உயர்வர்க்க பெருமுதலாளிய பேரினவாத ஆளும் தரப்புக்கள் தம்முள் அதிகாரத்திற்காக மோதி வருகிறார்கள்.

இதில் வடக்கு,கிழக்கு, மலையகப் பாராளுமன்ற ஆதிக்க சக்திகள் வர்க்க நிலைப்பாட்டில் நின்று வருகின்றன.

இவர்களுக்குத் தத்தமது மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றியோ அல்லது தீர்க்கப்பட வேண்டிய உடனடிப் பிரச்சினைகள், தேவைகள் பற்றியோ அக்கறை கிடையாது.

இந்நிலையில் இவர்கள் அனைவருமே தத்தமது வர்க்க நிலைப்பாட்டிற்கான முத்திரையைத் தெளிவாகக் காட்டி நிற்கிறார்கள்.

இவற்றை நன்கு உணர்ந்து உழைக்கும் மக்களும் இன, மொழி,பிரதேச, சாதி, சமூக அடிப்படைகளில் ஒடுக்கப்படுவோரும் தமக்கான மாற்று அரசியல் பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் பயணிப்பதற்குரிய கொள்கையிலும் நடைமுறைகளிலும் பயணிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



உடுவில் அகிலன் சனசமூக நிலையத்தின் முதலாமாண்டு விழாவும், விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு மற்றும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கியதுடன், முதியோர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக்கௌரவித்தார். அத்துடன் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# ஒட்டாவா பிரகடனத்திற்கு அமைய இலங்கை அறிக்கை சமர்ப்பிப்பு



(ஜெனிவா)

ஜெனிவாவிலுள்ள ஐக்கியநாடுகள் கட்டடத் தொகுதியில் அண்மையில் இடம்பெற்றசர்வதேச கூட்டத் தொடரில் ஜெனிவாசர்வதேச மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் நிலையத்தில் (International Centre for Humanitarian Demining) ஒட்டாவா பிரகடனத்திற்குஅமைவாக இலங்கை அரசு அறிக்கையை சமர்ப்பித்தது.

இதேவேளை ஜோர்தான் முடிக்குரியமன்னர் இளவரசர் Mired Zeid Bin Ra'ad Zeid Al-Hussein ஜெனிவாவில் நடைபெற்ற கண்ணி வெடியகற்றல் தொடர்பான கூட்டத் தொடரில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் பக்கநிகழ்வில் (side event) பங்கு பற்றிமுன்னேற்றம் தொடர்பாக மகிழ்ச்சி தெரிவித்தார். இதில் இலங்கை அரசினை பிரதிநிதித்துவப்படுத்தி மீள்குடியேற்றம், புனர் வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்திமற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, ஜெனிவாவிலுள்ள ஐக்கியநாடுகளின் இலங்கைக்கான நிரந்தரவதிவிடப் பிரதிநிதியும் தூதுவருமான ஏ.எல்.ஏ.அசீஸ், பிரதி நிரந்தரவதிவிடப் பிரதிநிதி மற்றும் அரச உயர் அதிகாரிகள் பங்குபற்றினர். (இ-7)

# 26 லட்சத்து 62 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுகளை ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த இலங்கையர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.



புத்தளம் பகுதியை சேர்ந்த 46 மற்றும் 48 வயதுடைய இரு வியாபாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சாஜாவில் இருந்து கல்ப் விமான சேவைக்கு சொந்தமான G 9501 என்ற விமானத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களின் பயணப் பொதியில் இருந்து 242 பெட்டிகளில் அடைக்கப்பட்ட 48 ஆயிரத்து 400 சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி சுமார் 2 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம்தொடர்பில்சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 'ஜனாதிபதி இனியாவது செவிசாய்க்க வேண்டும்'

## றிசாத் கோரிக்கை



(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால தடை உத்தரவை மதித்து, அந்த உத்தரவைக் கௌரவிக்கும் வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனியாவது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிசாத் பதியுதீன் எம்.பி. தெரிவித்தார்.

பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் வழங்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை அடுத்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி மேற்கொண்ட தவறைத் திருத்திக்கொண்டு சட்டவிரோதமாக செயற்படுகின்ற காட்டரசுக்கு எதிராகவும் அவர்களால் அரச நிதிகள் செலவு செய்வதற்கு எதிராகவும் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் மற்றும் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வெற்றிபெற்ற பின்னரும் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் ஜனாதிபதி தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்து வருகிறார்" என்றும் றிசாத் குற்றஞ்சாட்டினார்.


எனவே, அரசமைப்புக்கு கட்டுப்பட்டு, தான் செய்த தவறை, ஜனாதிபதி திருத்திக்கொண்டு, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை யுத்தரவுக்கு செவிசாய்த்து, பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி இனியாவது நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிந்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)



மேற்கண்டவாறு உடன்படிக்கை எழுதிய பின்பும் வன்னித் தலைவர்கள் வருடாவருடம் கொடுக்கவேண்டிய யானைகளைக் கொடுக்காது விட்டனர். டச்சுக்காரர் ஆட்சியை ஏற்றபின் 7 வருடங்களில் 74 யானைகள் நிலுவையில் இருந்திருக்கின்றன.

1671 இல் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 9 வருடங்களின் பின் 1680 இல் 313 யானைகள் கொடுக்கப்படாது நிலுவையாக இருந்திருக்கின்றன.

இருந்தும் டச்சுக்காரரின் கடுமையான நடவடிக்கைகள் மூலம் மேற்படி நிலுவையாக இருந்த கொடுப்பனவுகள் 1690களில் ஓரளவு சீர் செய்யப்பட்டன.

வன்னியிலிருந்தும் மன்னாரிலிருந்தும் பெறப்படும் யானைகளை விடத் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களிலிருந்தும் யானைகளை டச்சுக்காரர் வரியாகப் பெற்றனர். அங்கிருந்து பெறப்பட்ட யானைகள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டன.

தென்னிலங்கையிலிருந்து பெறப்படும் யானைகளும் யாழ்ப்பாணத்தில்தான் சந்தைப் படுத்தப்பட்டன. வன்னியில் பெறப்படவேண்டிய நிலவரி, உற்பத்திவரி போன்றவற்றிற்குப் பதிலாகக் குறைந்த விலைக்கு யானைகளை வாங்கிய டச்சுக்காரர் அவற்றைத் தென்னிந்திய வர்த்தகர்களுக்குக் கூடிய விலையில் விற்றிருக்கின்றனர் என மேற்படி புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

இதனால் சாதாரணமாக வன்னியிலிருந்து கிடைக்கும் வரியை விடக்கூடிய வருமானத்தை அப்பகுதி யானை வர்த்தகம் மூலம் பெற்றுள்ளனர்.

அத்துடன் வன்னியிலிருந்து வருடாவருடம் வரி வசூலிப்பதற்காக ஏற்படும் நிர்வாகச் செலவினங்களையும் மிச்சப் படுத்தியுள்ளனர்.

இந்திய வியாபாரிகள் கப்பல்களில் யாழ்ப்பாணம் வந்து யானைகளை ஏலத்தில் வாங்கிச் செல்வது வழக்கம். இதுவும் டச்சுக்காரருக்கு வசதியாக இருந்தது. அதாவது இந்தியாவிலிருந்து வியாபாரிகள் வரும் போது அரிசி போன்ற முக்கியமான நுகர்வுப் பொருட்களை ஏற்றிவர அனுமதி வழங்கப்பட்டது.

“தென்னிலங்கையிலிருந்து பெறப்படும் யானைகளும் யாழ்ப்பாணத்தில்தான் சந்தைப் படுத்தப்பட்டன. வன்னியில் பெறப்படவேண்டிய நிலவரி, உற்பத்தி வரி போன்றவற்றிற்குப் பதிலாகக் குறைந்த விலைக்கு யானைகளை வாங்கிய டச்சுக்காரர் அவற்றைத் தென்னிந்திய வர்த்தகர்களுக்குக் கூடிய விலையில் விற்றிருக்கின்றனர் என மேற்படி புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகின்றது. இதனால் சாதாரணமாக வன்னி யிலிருந்து கிடைக்கும் வரியை விடக்கூடிய வருமானத்தை அப்பகுதி யானை வர்த்தகம் மூலம் பெற்றுள்ளனர்”

அவ்வாறு கொண்டுவரும் பொருட்களை டச்சுக்காரர் மிகக் குறைந்த விலைக்கே வாங்கினர். ஏனெனில் அவ்வியாபாரிகள் அப்பொருட்களை ஏனைய வியாபாரிகளுக்கு விற்க முடியாது. குறைந்த விலைக்கு வாங்கப்பட்ட மேற்படி பொருட்களைப் பின்னர் கூடிய விலைக்கு உள்ளூர் வர்த்தகர்களுக்கு விற்றனர்.

டச்சுக்காரர் எவ்வாறு தமது அதிகாரத்தையும் வர்த்தக ஏகபோக உரிமையையும் பயன்படுத்தித் தமது வருமானத்தைப் பெருக்கியிருக்கின்றார்கள் என்பது இதிலிருந்து தெரிகின்றது. இவ்வாறான பொருளாதார நலன்களுக்காகவும் சுரண்டல்களுக்காகவும் டச்சுக்காரர் தமது ஏகபோக உரிமையை இந்திய வர்த்தகர்களுக்கு விட்டுக் கொடுக்கும் அளவிற்கு அவர்களின் செல்வம் சேர்க்கும் பேராசை இருந்திருக்கின்றது என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.

வாசனைத் திரவிய வியாபாரத்திலும் யானை வர்த்தகத்திலும் டச்சுக்கார வர்த்தக ஏகபோக உரிமை பெற்றிருந்ததுபோல் வடக்கில் முக்கியமான உற்பத்திப் பொருளாக இருந்த புகையிலை வர்த்தகத்தில் ஏகபோக உரிமை கொண்டிருக்கவில்லை. புகையிலை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக அளவிற் பயிரிடப்பட்டது.

வன்னியிலும் மன்னாரிலும் ஓரளவு புகையிலை உற்பத்தி செய்யப்பட்டது. தோம்பு அறிக்கையின் மூலம் யாழ்ப்பாணத்தில் தனியாருக்குச் சொந்தமான காணிகள் பற்றிய விபரங்கள் 1675 இல் பூர்த்தியாக்கப்பட்டன. இரண்டு வகையான காணிகள் இருந்தன.

ஒன்று தோட்டக்காணி, மற்றது வீட்டுக்காணி. வீட்டுக்காணியில் பிரதான குடியிருப்பாளரின் வீடும் அக்காணியின் எஞ்சிய பகுதியில் வீட்டுத் தோட்டமும் செய்யப்பட்டது.

தோட்டக்காணிகள் சிறு சிறு துண்டுகளாக, தனியாருக்குச் சொந்தமானதாக இருந்தன. இக்காணிகளிலேயே புகையிலை மிகவும் அதிகமாகச் செய்கை பண்ணப்பட்டது.

டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தின் முன்பே புகையிலை உற்பத்தி யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தான் அதன் உற்பத்தியும் ஏற்றுமதியும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன.

இதற்கு அடிப்படைக் காரணம் தென்னிந்தியாவில் யாழ்ப்பாணப் புகையிலைக்கு இருந்த வரவேற்பாகும். நிரந்தர மான வர்த்தக உறவுகள் திருவாங்கூர் வர்த்தகர்களுக்கும் யாழ்ப்பாணப் புகையிலை உற்பத்தியாளர்களுக்கும் இடையில் இருந்ததை அறியமுடிகிறது.

மேற்படி வர்த்தகர்கள் யாழ்ப்பாணத் துறைமுகங்களுக்கு வந்து புகையிலையை வாங்கிச் சென்றனர். அத்துடன் யாழ்ப்பாணப் புகையிலை விவசாயிகளுக்கு முற்பணமும் கொடுத்து அவர்களின் புகையிலை உற்பத்தியை ஊக்கப்படுத்தியுள்ளனர். இதை உற்றுநோக்கின் மேற் படி முற்பண உதவிக்காக மிகக் குறைந்த விலையிலேயே புகையிலையை வாங்கியிருக்கின்றனர்.

(தொடரும்)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் வைத்தியர் பசுபதி அச்சுதனுக்கு பிரியுபசாரம் செய்து வழியனுப்பி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்றது. நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை ஊழியர்கள் கலந்து கொண்டனர். வைத்தியர் ப. அச்சுதன் கடந்த மார்ச் மாதம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராகப் பொறுப்பேற்று வைத்தியசாலையில் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சுபேசன்)

# நிஸாம்தீன் விவகாரம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரரின் சகோதரர் கைது



அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணி வீரர் உஸ்மான் கவாஜாவின் சகோதரர் அர்சாலன் கவாஜா பயங்கரவாதக் குற்றத் தடுப்பு சட்டத்தின் கீழ் அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைப் பிரஜை நிஸாம்தீன் என்பவரை பயங்கரவாத குற்றத்தில் சிக்க வைத்தமை தொடர்பிலேயே அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதக் குற்றத்தின் கீழ் கடந்த மாதம் நிஸாம்தீன் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த சம்பவம் தொடர்பில் அவுஸ்திரேலிய பொலிஸார் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்ததுடன் சம்பவத்திற்கு காரணமாக இருந்த அர்சாலன் கவாஜா கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### பரீட்சையின் போது வயிற்று வலி

# சத்திர சிகிச்சையின் பின் பரீட்சை எழுதிய மாணவன்

(கல்முனை)

இம்முறைகல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவன் வயிற்று வலியால் துடித்த நிலையில் அவருக்கு உடனடியாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வயிற்றுவலியால் அவதியுற்ற மாணவன் அம்பாறை மாவட்டம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மாணவனுக்கு ஏற்பட்டுள்ள உபாதையின் தீவிரத்தையறிந்து கொண்ட சத்திர சிகிச்சை நிபுணர் முஹம்மத் சமீம் அந்த மாணவனுக்கு உடனடியாக சத்திர சிகிச்சை மேற்கொண்டதன் பயனாகமாணவன்இம்முறை க.பொ.த.சா.த பரீட்சைக்குத் தோற்ற முடிந்துள்ளது.

இது குறித்து சத்திர சிகிச்சை நிபுணர் முஹம்மத் சமீம் தெரிவிக்கையில்,

சாதாரண தர பரீட்சையை எழுதவிருக்கும் மாணவனொருவன் வலது பக்க அடிவயிற்று நோவுடன் வைத்தியசாலைக்கு வந்தார். அவரைப் பரிசோதனை செய்தபோது அவருக்கு குடல் வளரி உபாதை தீவிர நிலைமைக்கு வந்துள்ளதால் உடனடியாக சத்திர சிகிச்சையை செய்ய வேண்டும் என்று நான் கூறியதற்கு பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்து அவர்களுடைய அனுமதியை எழுத்து மூலம் வழங்கினர்.

அம்மாணவனின் வயிற்றினுள் குடல் வளரி வீங்கி வெடிக்கும் நிலையில் காணப்பட்டது.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்து மாணவனும் சுகமாகி திங்கட்கிழமை முதல்நாள் பரீட்சைக்கும் தோற்றியுள்ளார். பரீட்சை விடுபட்டுப் போகாமல் அவர் சிகிச்சை பெற்று பரீட்சைக்குத் தோற்றியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

ஆகவே நமக்குள்ள உபாதை குடல் வளரிதான் appendicitis என்று உறுதியானால் உடனடியாக சத்திர சிகிச்சை மேற்கொள்வது தான் சிறந்தது.

அவ்வாறு குடல் வளரியை கவனிப்பின்றி விட்டுவிட்டால் பின்னர் எவ்வாறேனும் அது வெடித்தால் அதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

எனவே மாணவர்களுடைய கல்வி, உடல் சுகாதாரம் தொடர்பில் பெற்றோர்கள் அக்கறையுடன் இருக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவின் ஆதரவாளர்கள் இருவர் ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களான நவுஸார் பௌசி மற்றும் கீர்த்தி காரியவன்ச ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கு சில தரப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்துவதற்கு சில தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தவுக்கு ஆதரவாக கட்சி தாவலில் ஈடுபட்டனர். அதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த சிலரும் ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பதாக கட்சி தாவலில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தவகையில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள், தங்களின் பதவி நிலைகளில் தொடர்ந்து இருப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ள நிலையில், நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லயன் கழக வலையமைப்பின் தலைவி இலங்கை வருகை



இலங்கைக்கு வருகை தந்துள்ள 206 உலக நாடுகளில் சுமார் 14 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள சர்வதேச லயன் கழக வலையமைப்பின் தலைவி திருமதி. (Gudrun Yngvadottir) குட்ருன் யெங்வோடோழ் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார்.

திருமதி. (Gudrun Yngvadottir) குட்ருன் யெங்வோடோழ் அம்மையாரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு நினைவு முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1577

Search for people, places and things


### காவ்யா

கறுப்பாக இருப்பவர்கள் அழகில்லை என்பது அர்த்தம் இல்லை....
அவர்கள் வண்ணம் பூசாத ஓவியங்கள்



### அஞ்சலி

இருக்கும் வரை ஒருவரின் அருமை நமக்கு புரிவதே இல்லை...



### ராஜேந்திரன்

உனக்குப் பிடித்த பலருடன் பழகுவதைவிட உன்னை மட்டுமே பிடிக்கும் ஒருவருடனே பழகிப் பார் உன்னையே நீ புரிந்து கொள்வாய்



### லிசா

எவ்வளவு அழுதாலும் சில வலிகள் குறைவதேயில்லை



### அஸ்வந்த்

சிரிப்பவர்கள் எல்லோரும் கவலையின்றி வாழ்வர்கள் இல்லை... கவலைகளை ம(றை)றக்க கற்றுக் கொண்டவர்கள்



### மனோ

இப்பெல்லாம் உண்மையா இருக்கனும்னு நினைக்கிறவங்களைவிட உண்மையா இருந்தா எங்கே ஏமாத்திடுவாங்களானு நினைச்சு பயப்படுகிறவங்கதான் அதிகம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கரியாலை நாகபடுவான் குளத்தை புனரமைப்பதற்கு மதிப்பீடுகள் ஆளுநருக்கு அனுப்பி வைப்பு

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தின் அணைக்கட்டை உயர்த்தி அதனைப் புனரமைத்துத் தருமாறு கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் உள்ள நீர்ப் பாசனக்குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் தற்போது 502 வரையான விவசாயக் குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றன.

அதாவது, இக்குளத்தின் கீழ் உள்ள சுமார் ஆயிரத்து 505 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி விவசாயிகள் காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளத்தின் அணைக் கட்டு புனரமைக்கப்படாமை மற்றும் ஏனைய கட்டுமானங்கள் புனரமைக்கப்படாமையினால் காலபோக செய்கை தவிர்ந்த ஏனைய சிறுபோகச்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது.

குளத்தின் அணைக் கட்டை இரண்டு அடியால் உயர்த்தி புனரமைப்பதன் மூலம் அதிகளவான நீரைத் தேக்கி சிறுபோக செய்கையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்குமென்றும் காலபோகத்தின் கூடுதலான பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ள கமக்கார அமைப்பினர் குறித்த குளத்தை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்

இக்குளத்தினைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனைப்புனரமைப்பதற்கு 326 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் இதற்கான முழுமையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மாத்தறை மாணவன் கொலை சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்பில் இனங்காணல்

(மாத்தறை)

மாத்தறை - எலவேல்ல வீதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதோடு, இது குறித்த இரண்டாவது சந்தேக நபரும், மூன்றாவது சந்தேக நபரும் அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கின் மூன்று சாட்சியாளர்களால், அடையாள அணிவகுப்பின் போது குறித்த சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி மாலை இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பின்னர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கடந்த 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில், இரண்டாவது மற்றும் மூன்றாவது சந்தேக நபர்களும் சரணடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வவு.பழைய பேருந்து நிலையத்தை மீளவும் திறப்பது தொடர்பில் நாளை ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல்



(கிளிநொச்சி)

வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மீளவும் திறப்பது குறித்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோர் வர்த்தக சங்கத்தினருடன் முன்னெடுத்த சந்திப்பையடுத்து நாளை6ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் பழைய பேருந்து நிலையத்திற்கு சுமுகமான ஒரு தீர்வு கிடைக்கும் என்று வர்த்தகர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இது குறித்து வர்த்தகர் சங்கச் செயலாளர் ஆ.அம்பிகைபாகன் தெரிவிக்கையில், புனர்வாழ்வு மீள் குடியேற்றம் மற்றும் இந்து கலாசார அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகிய முத்தரப்பினருடன் வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மீளத்திறப்பது குறித்தும் சகல பேருந்து சேவைகளையுழ் வந்து செல்வது தொடர்பிலும் இடம்பெற்ற கலந்துரையாடலில் சாதகமான பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன்வர்த்தகர் சங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், வர்த்தகர்கள், கமக்கார அமைப்புக் கள், பாடசாலை சமூகத்தினர் ஆகியோரின் மகஜர்கள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளை 6ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது. இதையடுத்து ஆளுநர் நேரடியாக மீள் திறக்கப்படவேண்டிய பேருந்து நிலையத்திற்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக சந்திப்பில் எங்களிடம் உறுதியளித்துள்ளார். இன்னும் சில தினங்களில் பழைய பேருந்து நிலை யம் மீள் திறப்பதற்குரிய நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக சங்க செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## மாணவன் படுகொலை; மூவரின் மறியல் நீடிப்பு

(மாத்தறை)

மாத்தறை - எலவேல்ல பிரதேசத்தில், கத்திக்குத்துக்கு இலக்காகி மாணவனொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர்கள் மூவரை யும், இம்மாதம் 10ஆம் திகதி வரை, தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி குறித்த மாணவன் படுகொலை செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | மருதனார்மடம் | கொடிகாமம் | |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| கத்தரிக்காய் | 100 | 120 | 150 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 480 | 350 | 500 |
| தக்காளி | 300 | 200 | 240 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 | 30 | 40 |
| கோவா | 80 | 140 | 80 | 150 | 100 |
| கரட் | 200 | 240 | 280 | 200 | 300 |
| பூசணி | 60 | 50 | 50 | 30 | 80 |
| புடோல் | 120 | 120 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 120 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 95 | 120 |
| பாகற்காய் | 300 | 280 | 300 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 140 | 35 | 140 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 300 | 200 | 250 | 220 | 120 |
| லீக்ஸ் | 200 | 260 | 220 | 180 | கிளிநொச்சி |
| பீற்றூட் | 160 | 120 | 180 | 50 | 200 ரூபா |
| கறிமிளகாய் | 280 | 200 | 300 | 130 | 280 |
| முருங்கைக்காய் | - | - | - | 300 | 400 |
| போஞ்சி | 150 | 240 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | - | 120 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 70 | 50 | 60 | 30 | 60 |
| தேசிக்காய் | 300 | 450 | 450 | 460 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 55 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 240 | 200 | 180 | 240 |
| வெங்காயப்பூ | - | - | - | - | - |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 50 | 15 | 30 |
| ஈரப்பலா | 80 | - | 80 | 140 | 100 |

# வேலை தேடிச் சென்ற யுவதி வீடு திரும்பவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் வேலை ஒன்றிற்குச் சென்றுவிட்டு வருவதாகத் கூறிச் சென்ற யுவதி ஒருவர் வீடு திரும்பவில்லை என்று நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தந்தையால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா செட்டிகுளம் வீரபுர்ம் பகுதியில் வசித்து வரும் 19 வயதுடைய யுவதி ஒருவர் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வீட்டிலிருந்து வவுனியாவிற்கு வேலை தேடிச் செல்வதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் மகள் வீடு திரும்பாததையடுத்து நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் அவரது தந்தை ஜெயராஜ் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட பொலிஸார் விசாரணையை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.(2-281)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு ஜனவரி மாதம் வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நிதி மோசடி குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணை நேற்று கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி வழக்கை எதிர்வுரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ-7)



பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக தசநாயகவின் தந்தை டி.எம்.பி.பி.தசநாயக்கவின் பூதவுடலுக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

# என்னைத் தாக்கியது மொட்டு உறுப்பினரே

## ஹேமலோக தேரர்

மஹரகம, சுதர்ஷனாராம விகாரையின் தேரர் கொட்டாவே ஹேமாலோக மீது கடந்த முதலாம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந் நிலையில் தேரர் தன்னை தாக்கியவர் மொட்டு கட்சியின் உறுப்பினரும் மஹரகம நகர சபையின் உறுப்பினருமான நிஷாந்த விமலச்சந்திரன் என தெரிவித்துள்ளார். முதலில் நிஷாந்த மட்டும் தகாத வார்த்தைகளை பிரயோகித்து தாக்கியதாகவும் பின்னர் அவரோடு ஏறக்குறைய 30 பேர் சேர்ந்து கொண்டதாகவும் தெரவித்தார். விகாரையின் தனது அறைக்கு வந்தவர்கள் தொலை பேசி மற்றும் ஏனைய பொருட்களை உடைத்து நொறுக்கியதோடு நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே தாம் இதை செய்வதாகவும் மிரட்டியுள்ளனர் எனத் தேரர் தெரிவித்தார். (இ-7)

# 'துவிச்சக்கர வண்டிகளில் திரிந்தால் ஆரோக்கியமான வாழ்வை வாழலாம்'

துவிச்சக்கரவண்டிகளிலும், நடந்தும் திரிந்தால் ஆரோக்கியமான வாழ்வை வாழலாம் என கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதேஸ்குமார் தெரிவித்தார்.

போசாக்கு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை காலை இமையாணன் மேற்கு கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிராம உத்தியோகத்தர் சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. இதில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதேஸ்குமார் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இதில் பிள்ளைகளுக்கு போசாக்கான உணவு வகைகளை வழங்குமாறும், வயது வந்தவர்கள் போசாக்கான உணவுகளை எடுக்குமாறு துவிச்சக்கர வண்டிகளை பயன்படுத்துமாறும், நடந்து திரிய வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-60)

# சிறுவர் அரங்கம்

## காயத்திரி மந்திரம்



சக்கரவர்த்தி அக்பரும் அவருடைய மதியூக மந்திரியான பீர்பாலும் ஒரு நாள் மாறுவேடமணிந்து நகர் சோதனை செய்து வந்தனர்.

அப்போது ஒரு யாசகன் எதிர்ப்பட்டான். அவனைப் பார்த்த அக்பர்,

இந்த இனத்தவர்களுக்கு யாசகம் செய்வது தவிர வேறு பயனுள்ள தொழிலெதுவும் செய்யத் தெரியாதா? என்று கேட்க, பீர்பாலின் மனத்தில் முள்ளெனத் தைத்தன அந்த வார்த்தைகள்.

பிறகு அந்த யாசகனைச் சந்தித்துக் கேட்டபொழுது தன்னுடைய பெரிய குடும்பத்தைக் காப்பற்ற வேறு வழி புலப்படாததால் யாசகம் செய்ய முற்பட்டதாகவும் இதன்மூலம் நாளொன்றுக்கு 25 ரூபாய் பணம் கிடைக்கின்றன என்றும் கூறினான்.

அதைச் செவியுற்ற பீர்பால் அவன் யாசகம் செய்வதை விட்டு விட்டு தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு 10 தரம் காயத்திரி ஜபம் செய்வதாக இருந்தால் அன்றாடம் அவனுக்கு 50 ரூபாய் தருவதாகக் கூறினார்.

அந்த ஏழையும் யாசகம்செய்வதை நிறுத்திவிட்டு பீர்பால் சொன்னபடி ஜபம் செய்து வந்தான்.

பயனெதுவும் கருதாமல் நாள் பூராகவும் காயத்திரி ஜபம் செய்து வந்ததால் அவன் முகத்திற்கு ஒரு அசாதாரணமான சாந்தி ஏற்பட்டது. இதை அறிந்த பீர்பால் அந்த ஏழையை அணுகி தினம் 108 தடவை காயத்திரி ஜபம் செய்தால் அவனுக்கு மாதம் 1000 ரூபாய் தருவதாகச் சொன்னார். அதற்கும் ஒப்புக் கொண்டு அந்த ஏழையும் தீவிரமாக ஜபம் செய்தார்.

ஒரு நாள் அவனுக்கு அஞ்ஞான இருள் நீங்கியது. அவனுக்கு அமோகமான ஆன்மீக வளர்ச்சியும் தெய்வீக ஒளியும் ஏற்பட்டு, தினந்தோறும் திரளான மக்கள் அவனை நாடி வணங்கி அருள் பெற்று வந்தனர். ஒரு மாதம் ஆனதும் அந்த ஏழை பணம் வாங்க வராததால் பீர்பாலே அவன் வீட்டிற்கு வந்து பணம் கொடுத்தார். ஆனால் அவன் பணிவுடன் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து, அவனுக்குச் சிறந்த ஆன்மீக வழியைக் காட்டியதற்காக பீர்பாலுக்கு நன்றி தெரிவித்தான்.

மறுநாள் பீர்பால் அக்பரை அந்த ஏழை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவன் முகத்தில் தென்பட்ட தேஜஸையும் அங்கு அருள் பெற வந்த மக்களையும் பார்த்த அக்பர் மிக ஆச்சரியப்பட்டார்.

அக்பரும் அவர் காலில் விழுந்து அருள் புரியுமாறு வேண்டினார்.

சில மாதங்களுக்கு முன் நீங்கள் இகழ்ந்து பேசிய அதே யாசகன்தான் இவன் என்று சக்கரவர்த்தியின் காதில் கிசு கிசுத்தார் பீர்பால்.

சக்கரவர்த்தி நம்பாமல் அந்த ஏழையிடம் இந்த மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்டார்.

அவனும் நடந்ததைச் சொன்னான்.

காயத்திரி ஜபம் செய்ததால் வந்த பெருமை என்று பீர்பால் விளக்கினார்..

சுருங்கக் கூறின், காயத்திரி ஜபத்தினால் பட்ட மரம் தழைக்கும், தரித்திரனும் தனிகனாவான். வாழ்வில் நிம்மதியின்றித் தவிப்பவர்கள் நிம்மதியும், மனச் சாந்தியும் பெறுவார்கள். சத்துருக்கள் நாசமடைவார்கள், பாபங்கள் நீங்கிப் பிறவித்துயர் நீங்கும். வேதஸாரமான இந்த மந்திரம் நம் ரிஷிகளின் அருளினால் நமக்குக் கிடைத்த அறிய பொக்கிஷம்.

## கிட்டிப் புள்ளு

ஆலையிலே சோலையிலே
ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறிக்கியடிக்கப்



பாலாறு, பாலாறு, பாலாறு
ஆத்துக்கட்டு அலம்பக்கட்டு
அவிட்டுக்கட்டு இறுக்கிக்கட்டு
இறுக்கிக்கட்டு இறுக்கிக்கட்டு

கீழாறோலை மேலாறோலை
எண்ணிப் பார்த்தால் - பதினாறோலை
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு பாலாறு

## சுத்தம்




இப்போது உங்கள் குழந்தை ஒரு பாலகன். அவர்களுக்குச் சுத்தமாக இருப்பதைப் பற்றியும் தூய்மை மற்றும் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டிய நேரம் இது. தினமும் குளிப்பது. விரல் நகங்களை வெட்டுவது. உண்ணுவதற்கு முன்னாள் கைகளைக் கழுவுவது. கழிவறைக்குச் சென்ற பிறகு கைகளைக் கழுவுவது போன்ற நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுக்க ஆரம்பியுங்கள்.

## பொன்மொழிகள்



அனைத்து நட்புக்கு பின்னாலும் ஒரு சுயநலம் இருக்கிறது. சுயநலங்கள் இல்லாத நட்பு இல்லை. இது ஒரு மிகவும் கசப்பான உண்மை.

பொருள்: நட்பு என்பது மனித வாழ்வின் அற்புதங்களில் இருக்கும் மிகச்சிறந்த அற்புதமாகும். எங்கோ பிறந்த ஒருவர் நமக்காக கண்ணீர் விடுவதும் கஷ்டங்களில் உதவுவதும் நட்பில் மட்டுமே சாத்தியம். ஆனால் சுயநலம் என்பது மனிதர்கள் உடன்பிறந்த குணமாகும். எனவே அது எந்நாளும் அது மனிதனை விட்டுப்பிரியாது. நட்பிற்கும் இது பொருந்தும். இதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள்.



"சிங்கத்திடம் இருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியது யாதெனில் எதைச் செய்தாலும் அதனைத் தன் முழுமனதுடனும் கடுமையான முயற்சியுடனும் செய்ய வேண்டும்."

பொருள்: சிங்கம் ஒரு இரையை குறிவைத்து விட்டால் அதனை வேட்டையாடும் வரை அதன் கவனம் வேறு எங்கும் திசைமாறாது. இரையை வேட்டையாட சிங்கம் எந்த எல்லைக்கும் செல்லும். அதேபோல மனிதனும் தன் குறிக்கோளை அடையும் வரை திசை மாறாமல் கடினமான முயற்சியுடன் தன் இலட்சியத்தை அடைய வேண்டும்.

நம்பிக்கை இல்லாத பயமும் கிடையாது.
பயம் இல்லாத நம்பிக்கையும் கிடையாது.
- வால்டேர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை கூட்டமைப்பு கேட்டிருக்க வேண்டாமா?

ஒரு நாள் தேர்தல், ஒரு கணப்பொழுதில் வாக்களிப்பு அவ்வளவுதான். வென்றவர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியோடு சுகபோகம் அனுபவிப்பார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆண்டனுபவிப்பதற்காக வாகன அனுமதிப்பத்திரம் முதல் ஏனைய கொடுப்பனவுகள் என அனைத்தும் சேர்ந்து கொள்ள, ஜனநாயகத்தின் இருப்பு கேள்விக்குள்ளாகிவிடுகிறது.

இந்த உண்மையிப்பாட்டை நாட்டின் தற்போதைய அரசியல் சூழமைவு மிகத் தெளிவாக நமக்கு விளக்கி நிற்கிறது.

இவை ஒருபுறமிருக்க, 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக வந்து ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குங்கள் என்று கேட்டாலும் நான் செய்யமாட்டேன் என ஜனாதிபதி மைத்திரி நிறுதிட்டமாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரி இவ்வாறு கூறிய பின்பும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியினர் நிற்பது அவர்களின் கடும் பிடியையே காட்டுகிறது.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கிய ஜனாதிபதி மைத்திரியின் செயல் சரியா? பிழையா? என்பதற்கு அப்பால்,

அவ்வாறானதொரு முடிவை ஜனாதிபதி எடுத்ததற்குப் பின்னால் வலுவான காரணங்கள் ஏதேனும் உண்டா என்று ஆராய்வது அறிவார் தொழில்.

அவ்வாறானதோர் தேடலில் ஜனாதிபதி மைத்திரி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைகளே சாட்சியங்களாக அமைகின்றன.

ஜனாதிபதி மைத்திரி ஆற்றிய உரையில் கூறப்பட்ட விடயங்களை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? என்பது பற்றியும் ஆராய்வது இங்கு அவசியமாகின்றது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி மைத்திரி நாட்டு மக்களை நோக்கி தனது உரையை முன்வைக்கின்றார்.

அந்த உரையில் ரணில் விக்கிரமசிங்க மீது அவர் கொண்ட கடும் கோபம் வெளிப்பட்டு நிற்கிறது.

அதுமட்டுமன்றி எதற்கும் நான் தயார். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்கு மட்டும் நான் ஒருபோதும் உடன்பட மாட்டேன் என்று ஜனாதிபதி கூறுவதானது அவரின் முடிவு மறுபரிசீலனைக்குட்படக் கூடியதல்ல என்பதையும் பட்டவர்த்தனமாக்கியுள்ளது.

ஆக, நாட்டின் அரசியல் சூழ்நிலை சுமுகமாக அமைய வேண்டுமாயின் மறுபரிசீலனை என்ற விடயம் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கமே இருப்பதாக உணரமுடிகின்றது.

இருந்தும் ரணிலைப் பிரதமராக்குவது என்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் விடாத பிடி என்று நிற்பதை உணரமுடியும்.

கூட்டமைப்பின் இந்த முடிவு சறுக்கினால் அவர்கள் தமிழ் மக்களின் முகத்தில் முழிப்பது கடினம் என்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்படும்.

இவற்றையெல்லாம் வெற்றி கொள்ள வேண்டும் எனக் கூட்டமைப்பு நினைத்திருந்தால், அவசரஅவசரமாக தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை கேட்டறிந்திருக்க வேண்டும்.

என்ன செய்வது எனக்கு எல்லாம் தெரியும் என்று வந்துவிட்ட பின்பு யார் என்ன கூறினாலும் அது ஏறப்போவதில்லை என்பதே உண்மை.

# மகிந்தவின் பாதுகாப்பை நீக்க வேண்டும்

## நளின் பண்டார வலியுறுத்து

(கொழும்பு)

அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளதாக அறிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த முன்னாள் ஜனாதிபதி என்பதால் அவருடைய பாதுகாப்பை முற்றாக நீக்கு மாறு கோரவில்லை என்ற போதிலும் அவர் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள மேலதிக பாதுகாப்பை நீக்குமாறே கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி புதிய பிரதமர் நியமிக் கப்பட்டதன் பின்னர் பொலிஸ்மா அதிபரால் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களின் பாதுகாப்பு நீக்கப்பட்டதைப் போன்று உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ்மா அதிபரால் புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பும் நீக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# பளையில் நாய்களுக்கான சரணாலயம்

## நிவாரணம் அமைப்பு நிறுவுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கும் "நிவாரணம்" அமைப்பு கிளிநொச்சி- பளை பிரதேசத்தில் நாய்களுக்கான சரணாலயம் ஒன்றையும் அமைக்கவுள்ளதாக அந்த அமைப்பின் நிறுவுநர் எஸ்.செந்தில்குமரன் தெரிவித்துள்ளார்

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் சந்திப்பு இடம்பெற்றது.அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2005ஆம் ஆண்டு தொடக்கம் எமது அமைப்பின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை செய்து வருகின்றோம். ஆரம்பத்தில் புனர்வாழ்வு கழகத்தின் ஊடாக எமது உதவி திட்டங்களை செய்து வந்த நாம் தற்போது நேரடியாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவி திட்டங்களை செய்து வருகின்றோம். குறிப்பாக எமது அமைப்பின் ஊடாக இதுவரையில் 100 திற்கும் மேற்பட்ட வாழ்வாதார உதவிகளை செய்துள்ளோம்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சங்கமி என்ற பெண்கள் அமைப்பின் ஊடாக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை ஒன்றை 10 லட்சம் ரூபாய் செலவில் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். இருதய சத்திர சிகிச்சைக்கு பூரணமான நிதி உதவியை வழங்கியுள்ளோம். இதேபோல் சிறுநீரக பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு மருத்துவ தேவைகளுக்கும் கூட எமது உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

எமது இத்தகைய உதவி திட்டங்களுக்கான நிதியை நானும், கனடா மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளில் வாழும் நண்பர்கள், உதவும் எண்ணம் கொண்ட கொடையாளர்கள் ஊடாக பெறுகிறோம்.

மனிதர்களாக பிறந்த நாம் பிற மனிதர்களுக்கு உதவியளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் இத்தகைய உதவி திட்டங்களை நாங்கள் செய்து வருகின்றோம். இதற்கு மேலதிகமாக எதிர்காலத்தில் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளை அமைத்து அதனை மக்களிடமே கொடுத்து அவர்களே அதன் ஊடாக நன்மைகளை பெறும் வகையிலான செயற்றிட்டங்கள் தொடர்பான சிந்தனை எங்களிடம் உள்ளது. ஆனால் அது சாதாரணமான விடயமல்ல. மிகுந்த சிக்கலான அல்லது சிரமமான விடயமாக இருக்கிறது.

ஆனாலும் அதனை குறித்து நாங்கள் சிந்திக்கிறோம். அதேபோல் எமது அமைப்பின் இந்த செயற்பாடுகளுக்கு புறம்பாக கிளிநொச்சி பளை பிரதேசத்தில் எமது சொந்த நிதியின் ஊடாக காணி ஒன்றை கொள்வனவு செய்து அதில் நாய்களுக்கான சரணாலயம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அது எதற்காக என்றால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இன்று கட்டாக்காலி நாய்களினால் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கிறார்கள், குறிப்பாக விபத்துக்கள் இடம்பெறுகின்றன,

உயிரிழப்புக்களும் நடக்கின்றன. எனவே நாய்களை பாதுகாப்பதற்கான சரணாலயம் ஒன்றை அமைப்பது எங்களுடைய நோக்கம். அதேபோல் விலங்குகள் மீது சுமத்தப்படும் துன்புறுத்தல்களுக்கு எதிராகவும் நாங்கள் குரல் கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். இதற்காக எமக்கு பொதுமக்களிடம் இருக்கும் ஆதரவு மேலும் அதிகரிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
16
2018
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
தீர்மானமெடுத்தலில் பெண்களையும் அங்கீகரிப்போம்.
சமத்துவம் காப்போம்!
JSAC

## நாட்டின் பிரச்சினைக்கு காரணம் 19ஆவது திருத்தம் - கோத்தபாய

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் நிலைக்கு 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினைக் கொண்டு வந்தவர்களே பொறுப்புக்கூற வேண்டும். அரசியலமைப்பு தொடர்பில் இதுவரை காலமும் இத்தகையதொரு குழப்பநிலை ஏற்பட்டதில்லை. எனினும் தற்போது இவ்வாறானதொரு பிரச்சினை ஏற்படுகின்றதெனின் அதற்கு முறையான உள்ளடக்கங்கள் அற்ற 19ஆவது அரசியலமைப்பு திருத்தமே காரணமாகும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகளுக்காக நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

மக்களிடம் செல்வதற்கு எவரும் அச்சமடையத்தேவையில்லை. ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் செல்வதை விடுத்து, முதலில் மக்களின் அபிப்பிராயம் என்னவென்று தெரிந்து கொள்வதற்கு முன்வர வேண்டும். மக்களிடம் செல்வதற்கு அஞ்சக்கூடாது என்றார். (ம-3)

## ஜனாதிபதி கொலைச்சதித்திட்டம் குறித்து மேலும் பல தகவல்கள் இன்று வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதி கொலைச் சதித்திட்டத்தின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் தகவல்களை அம்பலப்படுத்திய நாமல் குமாரவின் ஏற்பாட்டில் இன்று 5ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் அம்பாறை பேருந்து தரிப்பிடத்திற்கருகில் மக்கள் எழுச்சி கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இம் மக்கள் எழுச்சிக் கூட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நாமல் குமார, ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கொலை சதித்திட்டம் தொடர்பில் இது வரையில் வெளிப்படுத்தாத தகவல்களை இம்மக்கள் எழுச்சிக் கூட்டத்தில் கூறப்போவதாகவும் மேலும் இம் மக்கள் எழுச்சி கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் பிக்குகள் சிலரும் மஹாஓய ஆதிவாசிகளின் பிரதிநிதி ஒருவரும் உரையாற்றவுள்ளனர் எனவும் நாமல் குமார தெரிவித்தார். (இ-7)

## அலோசியஸ், பலிசேனவிற்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

பேர்ப்பர்சுவல்ட்ரசஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகிய இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிவு மோசடி குற்றச்சாட்டு தொடர் பிலான விசாரணை நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள் ளப்பட்டது.

இதன்போது குறித்த இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை மததிய வங்கியின் பிணை முறிவு மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### விவேகத்துடன் செயற்படு!



✦ படைவுள் ஒருவரே உலகில் சத்தியப் பொருள். மற்ற அனைத்தும் பொருளற்ற பொய்ப் பொருளே. இதை உணர்ந்தவனே விவேகியாவான்.

✦ கடவுளின் திருநாமத்திற்கு சக்தி அதிகம். அதை ஜெபிப்பதற்குரிய தகுதி தூய பக்திக்கு மட்டுமே உண்டு.

✦ பக்தியுள்ளவனாக மாறி விடு. அதே சமயத்தில் மனதில் மூடத்தனத்திற்கு சிறிதும் இடம் அளிக்காதே.

✦ அன்புக்கும், அறிவுக்கும் சமபங்கு அளிக்கும் மனிதனே பாக்கியவான். அவனது மனம் சமநிலை இழப்பதில்லை.

# எவ் 3 குளிர்கால அப்சலூட் ரேசிங் இலங்கை வீரர் எஷான் பீரிஸ் இணைவு

இலங்கையைச் சேர்ந்த எஷான் பீரிஸ் எப்.ஐ.ஏ.குளிர்காலத் தொடரினால் சான்றிதழ் அளிக்கப்பட்ட இவ்வருடத்துக்கான F3 ஆசிய சம்பியன்ஷிப் அப்சலூட் ரேசிங் போட்டியில் இணைந்துள்ளார். கொழும்பைப் பூர்வீகமாகக் கொண்ட 20 வயதுடைய இவர் **Asian Formula Renault Series** இல் தனி ஆசனப் பிரிவுப் போட்டிகளில் முதலாவது வெற்றியைப் பதிவுசெய்துள்ளார்.

எஷான் பீரிஸ் இலங்கையின் முதலாவது மோட்டார் பந்தய வீரர் என்ற எதிர்பார்ப்பைப் பெற்றிருப்பதுடன், ஆசிய கனிஷ்ட தனி ஆசனப் பிரிவில் போட்டியிடும் பல இளம் வீரர்களின் அடிகளை இவர் பின்பற்றி வருகிறார்.




அப்சலூட் ரேஷிங்கில் இவர் தனது திறமையை வெளிக்காட்டியதன் மூலம் கார்ப்பந்தயம் எனும் ஏணியில் மேலும் மேலும் முன்னேறிச் செல்வதற்குத் தயாராக இருக்கிறார் என்பதைக் காண்பித்துள்ளார்.

சிறந்த ஆசியாவில் சிறந்த கார்ட்டிங் போட்டிப் பின்னணியைக் கொண்ட இவர், தனி ஆசனப் போட்டிப் பிரிவுகளில் வெற்றிகளையும் கேடைய முடிப்புக்களையும் பதிவுசெய்துள்ளார். இவர் சீனாவின் திறமையான பந்தய வீரர் ஜீ ஜிபியுடன் பங்காளராக இணைந்திருப்பதுடன், மூன்றாவது பந்தய வீரரின் பெயர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த எஷான் பீரிஸ், "ஆசியாவில் மதிப்பைப் பெற்றுள்ள அப்சலூட் ரேஸிங் போன்ற சிறந்ததொரு அணியுடன் இணைந்து பணியாற்றக் கிடைத்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அனுபவம் மிக்க இவர்களிடமிருந்து நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும். நான் மிகவும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பதுடன், சம்பியன் ஷிப்பை பெற்றுக் கொள்ளும்வரை பொறுமையாக இருக்க முடியாதுள்ளது" என்றார்.

அப்சலூட் ரேசிங் அணியின் பணிப்பாளர் இங்கோ மட்டர் குறிப்பிடுகையில், "2018 ஆம் ஆண்டு குளிர்காலப் போட்டியில் F3 பந்தய வீரராக எஷானை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். தனி ஆசனப் பந்தயப் பிரிவில் இவர் தனது திறமையைச் சிறப்பாக வெளிக்காட்டியிருந்தார். முன்னணி பந்தய வீரராக இவரை முன்னேற்றுவதற்த இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

எப்.ஐ.ஏ. குளிர்காலத் தொடரினால் சான்றிதழ் அளிக்கப்பட்ட F3 ஆசிய சம்பியன்ஷிப் போட்டியானது ஒன்பது போட்டிகளைக் கொண்டதாகவிருக்கும். மூன்று மூவரைக் கொண்ட போட்டிகள் எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதி தாய்லாந்தின் புரிராம் சர்வதேச சேர்க்கிட்டில் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் இரண்டு சுற்றுக்கள் மலேசியாவின் செப்பாங் சர்வதேச சேர்க்கிட்டில் ஜனவரி 20 ஆம் திகதிகளில் மற்றும் பெப்ரவரி 24 ஆம் திகதிகளில் நடத்தப்படும். (க)

# இந்திய அணி வெல்வதற்கு இதுவே பொன்னான நேரம்

## சச்சின் டெண்டுல்கர்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரைக் கைப்பற்ற இந்தியாவுக்கு பொன்னான வாய்ப்பு இருப்பதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்தத் தொடர் குறித்து இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கருத்து தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், 'அவுஸ்திரேலிய மண்ணில் முதல் 35 ஓவர்களை எதிர்கொள்வது மிகவும் சிரமமாக இருக்கும். 350 இற்கும் அதிகமான ஓட்டங்களைக் குவிக்க வேண்டும்.

அதேபோல் பந்துவீச்சாளர்களும் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்து, ஓட்டங்கள் குவிப்பதை கட்டுப்படுத்த வேண்டும். டேவிட் வோர்னர் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகிய இருவரை நம்பியே அவுஸ்திரேலியா அணி இருந்தது. தற்போது அவர்கள் இல்லாததால் அணி பலவீனமாகி உள்ளது. எனவே இந்தத்தொடரை வெல்ல இந்தியாவுக்குப் பொன்னான வாய்ப்பு உள்ளது' எனத் தெரிவித்துள்ளார். (க)

# ஐ.பி.எல். திருவிழா வீரர்கள் ஏலம் ஆரம்பம்



2019 இற்கான ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் ஏலம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடக்கும் நிலையில் முன்னணி வீரர்கள் பலர் அணி மாறவுள்ளனர்.

இருபது-20 கிரிக்கெட் தொடர் 2008 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவில் நடந்து வருகிறது. இதில் வெளிநாட்டு வீரர்களும் பங்குபற்றி விளையாடி வருகிறார்கள்.

இந்த தொடருக்கான வீரர்கள் ஏலத்தின் மூலம் எடுக்கப்படுவதால், சிறப்பாக ஆடும் வீரர்களுக்குக் கோடிகளில் ரூபாய் கொட்டுகிறது.

இந்நிலையில் 2019 ஆம் வருடத்துக்கான ஐ.பி.எல். ஏலம் ஜெய்ப்பூரில் நடைபெறும் என ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த ஏலத்தில் 50 இந்திய வீரர்கள், 20 வெளிநாட்டு வீரர்கள் என மொத்தம் 70 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட இருக்கின்றனர்.

இந்த ஏலத்தில் பல வீரர்கள் அணி மாறிவிட்டனர். பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணியில் இருந்து தென்னாபிரிக்க விக்கெட் கீப்பர் டிகாக் விடுவிக்கப்பட்டு, அவர் மும்பை இண்டியன்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த அணியில் இருந்த அகிலா தனஞ்செயா, முஸ்தபிஷ“ர் ரஹ்மான் விடுவிக்கப்பட்டுள்ளனர். கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, யுவராஜ் சிங் உட்பட 11 வீரர்களை விடுவித்துள்ளது.

அதனால் அந்தப் புதிய வீரர்களை அதிகமாக இந்த ஏலத்தில் எடுக்கலாம். டில்லி அணி, கவுதம் காம்பீர் உட்பட சில வீரர்களை விடுவித்துவிட்டது.

சன் ரைசர் ஐதராபாத் அணியில் இருந்த ஷிகர் தவான், டில்லி அணிக்கு மாறியுள்ளார். அந்த அணி விருத்திமான் சாஹா, பிராத்வொயிட் ஆகியோரை விடுவித்துள்ளது.

இதேபோல மற்ற அணிகளும் சில வீரர்களை விடுவித்தும் புதிய வீரர்களை எடுக்கவும் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆறாவது இடத்தில் அஸ்வின் ஐடியா கொடுக்கிறார் கும்ளே

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் தமிழக வீரர் அஸ்வினை ஆறாவது இடத்தில் இறக்கி விடலாம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் அனில்கும்ளே தெரிவித்துள்ளார்.

இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி நாளை அடிலெய்டில் நடைபெறவுள்ளது.

இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் தொடர் தோல்விகளை சந்தித்து வருவதால், அவுஸ்திரேலிய தொடரில் நிச்சய வெற்றியை நோக்கி உள்ளது.

டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பதற்கு போராடி வந்த ரோகித் சர்மாவுக்கும் இந்த தொடரில் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி வாய்ப்புக் கொடுக்கப்பட்டால், இவர் 6 ஆவது வீரராக களமிறங்க வாய்ப்புள்ளது.

அதேசமயம் மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் ரிஷப் பண்ட் 6 ஆம் வரிசையில் களமிறங்கி சிறப்பாக ஆடினார்.




இதனால் அவுஸ்திரேலியா தொடரில் 6ஆம் வரிசையில் யார் களமிறக்கப்படுவார் என்ற குழப்பம் நீடிக்கிறது.

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரரான அனில்கும்ளே, அவுஸ்திரேலியாவில் 6 ஆம் வரிசைக்கு ரிஷப் பண்ட் சரியாக வரமாட்டார்.

அஸ்வினை 6 ஆம் வரிசையில் களமிறக்கலாம். ஏனெனில் அவுஸ்திரேலியாவில் அந்த இடத்தில் அவரால் சிறப்பாக ஆடமுடியும்.

குறிப்பாக வெளிநாட்டு சுற்றுப்பயணங்களில் அஷ்வின் 6 ஆம் வரிசை வீரராக சிறப்பாக செயற்படுவார் என்று நம்புகிறேன்.


இங்கிலாந்தில் கூட அஸ்வின் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். அஸ்வினின் துடுப்பாட்ட முறையும் நன்றாக இருக்கிறது என்பதால் அவரை களமிறக்கலாம் என்று கூறியுள்ளார். (க)

# கெய்ல் தவறாக நடக்கவில்லை நீதிமன்றம் அதிரடித்தீர்ப்பு

2015 ஆம் ஆண்டு உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடந்தது. இந்த போட்டியில் பங்கேற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் உதவி மசாஜ்தெரபிஸ்டாகப் பணியாற்றிய பெண், சிட்னியில் அந்த அணியினர் தங்கி இருந்த அறைக்குள் சென்றபோது கிறிஸ் கெய்ல் ஆபாசமாகப் பேசியதாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பேர்பேக்ஸ் மீடியா குழுமம் செய்தி வெளியிட்டது.

இதனை அடுத்து கெய்ல், அவுஸ்திரேலிய உச்ச நீதிமன்றத்தில் பேர்பேக்ஸ் மீடியா குழுமம் மீது மானநஷ்ட வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மெக்கல்லம் பேர்பேக்ஸ் மீடியா குழுமம் கெய்ல் மீது குற்றம்சாட்டி வெளியிட்ட செய்தியை உண்மை என்று நிரூபிக்கவில்லை என்று கடந்த ஒக்டோபர் மாதம் தனது தீர்ப்பில் தெரிவித்து இருந்தார். ஆனால் இழப்பீடு தொகை விபரம் வெளியிடப்படவில்லை. (க)




அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## அரசியல் அமைதியின்மை...

தேசியக் கட்சியின் தலைவரே ஆவார் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி இந்த தூரநோக்கற்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து நாட்டை கட்டி யெழுப்பும் புண்ணிய பணிக்கு பங்குகொள்ளு மாறு தான் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் சமாதானக் கரங்களை நீட்டுவதாகக் குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தாராண்மைவாத அரசியல்கொள்கை நாட்டை அழிவுக்குள்ளாக்கியது மட்டுமன்றி நல்லாட்சி எண்ணக் கருவையும் அப்பட்டமாக துவம்சம் செய்தது என்றும் அக்கொள்கையின் காரணமாக பண்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமன்றி தமக்கும் பல தீய விளைவுகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அந்த செயற்பாடுகளுக்கு மத்தியில் தம்மால் எடுக்கக்கூடிய ஒரேயொரு முடிவாக ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்குவதே என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போதும் நாட்டு மக்கள் மீதே நம்பிக்கை வைத்துள்ளதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி நாட்டை அழிவுக்குள்ளாக்கும் தீவிர தாராண்மைவாத அரசியல் செயற்திட்டத்தை தோல்வியுறச் செய்யக்கூடிய தேசாபிமானமும் மனித நேயமுமிக்க ஒரேயொரு அரசியல் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகும் என்றும், அதற்காக கட்சியை பலப்படுத்தி முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமென்றும் குறிப்பிட்டார். (ம)

## மனுக்களின்...

வரை இடம்பெறவுள்ளன.

நேற்றையதினம் பிரதானமாக மனுதாரர்களின் சமர்ப்பணங்கள் இடம்பெற்றிருந்தன.

அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இடையீட்டு மனுக்கள் மீதான சமர்ப்பணங்கள் இன்றைய தினம் இடம்பெறவுள்ள நிலையில், சட்டமா அதிபரின் சமர்ப்பணமும் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட 13 பிரிவினர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இடைக்காலத் தடைக்கெதிராக மகிந்த நேற்று மேன் முறையீடு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர் சார்ந்த அமைச்சரவைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு நேற்று மாலை 3 மணியளவில் தாக்கல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவை மனுதாரராகக் குறிப்பிட்டுள்ள அந்த மனுவில் மேன்முறையீட்டு நீதிமன்றின் இடைக்காலக் கட்டளையை வெற்றும் வெறிதானதாக ஆக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசியலமைப்புக்கு வியாக்கியானம் வழங்க முடியாது என்றும் அந்த அதிகாரம் உயர் நீதிமன்றுக்கே உள்ளது என்று மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனுவை குறைந்தது 3 நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வே விசாரிக்க முடியும். அதனால் மனு விசாரணைக்கு எடுப்பது தொடர்பான பிரதம நீதியரசரின் அறிவிப்பு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3)

## ஜனநாயகத்...

நாட்டில் மகிந்த தரப்பு காட்டுச் சட்டத்தை முன்னெடுப்பதாகவே அமையும் எனவும் குறிப்பிட்டார்.

இச்சூழ் நிலையில் நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவேனும், மீண்டும் ஒரு பிரதமரை நியமிக்க முயற்சிக்கும் நாடகத்தை கைவிட்டு, நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு முன்னரான அரசாங்கத்தினை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற கலைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கின் விசாரணைகளுக்காக நேற்று உயர் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்த வேளையில், நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம)

## ரணில் என்...

கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க தனக்கு விருப்பமான முறையில் மிக மோசமான நிலைக்கு ஆட்சியை கொண்டு சென்றார். ஒரு கட்டத்தில் என்னையும் அவர் கெடுத்துவிட்டார்.

இதேவேளை, ரணில் வடக்கு மக்களை ஏமாற்றினார். தொழிலாளிகளை ஏமாற்றினார்.

நல்லாட்சியின் கொள்கையையும் சீரழித்து ஐக்கிய தேசியக் கட்சியையும் சீரழித்து என்னையும் சீரழித்தமையால் நான் பிரதமர் பதவியிலிருந்து ரணிலை விரட்டியடித்தேன்.

நாட்டின் நீதிமன்றம் பக்கச்சார்பாக செயற்படுவதாக ஒருதரப்பு மக்கள் குற்றம் சுமத்துகின்றனர் எனவும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம)

## மண்ணுக்குள் சிக்குண்டு...

இரவு டிப்பர் ரக வாகனம் ஒன்றில் மண் ஏற்றுவதற்காக வாகனத்தின் சாரதியுடன் உதவியாளர்கள் 4 பேர் உட்பட 5 பேர் குஞ்சுக்குளம் சென்று குறித்த டிப்பர் வாகனத்தில் மண் ஏற்றியுள்ளனர்.

பின்னர் குறித்த மண் சிலாபத்துறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த வாகனத்தின் சாரதி மற்றும் மேலும் 3 உதவியாளர்கள் முன் இருக்கையில் இருந்துள்ளனர்.

5 ஆவது நபர் டிப்பர் வாகனத்தில் மண் ஏற்றப்பட்ட பகுதிக்கு மேல் ஏறி படுத்துள்ளார்.

குறித்த டிப்பர் வாகனம் குஞ்சுக்குளத்தில் இருந்து சிலாபத்துறை நோக்கி சென்ற நிலையில், சிலாபத்துறை பகுதியில் உரிய இடத்தில் மண் கொட்டப்பட்டுள்ளது என தெரிய வந்துள்ளது.

இதன் போது மண் மீது ஏறி படுத்துள்ள மன்னார் தம்பனைக் குளம் கிராமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தை என்பவரே கொட்டப்பட்ட மண்ணினுள் சிக்கியுள்ளார்.

மண் கொட்டப்பட்ட நிலையில் மீண்டும் குறித்த டிப்பர் வாகனமும் அதில் பயணித்தவர்களும் குஞ்சுக்குளம் பகுதிக்குச் சென்ற நிலையில், குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதி உட்பட ஏனைய மூவரும், குறித்த நபரை தேடிய போது குறித்த நபர் அங்கே இருக்கவில்லை.

மீண்டும் மண் கொட்டப்பட்ட இடத்திற்கு வந்து பார்த்த போது குறித்த நபர் அங்கே மண்ணில் புதைந்த நிலையில் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக குறித்த குடும்பஸ்தரை மீட்டவர்கள் முருங்கன் வைத்திய சாலைக்கு கெண்டு சென்றுள்ளனர்.

எனினும் குறித்த குடும்பஸ்தர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த குடும்பஸ்தரின் சடலம் முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை மற்றும் முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

## வடக்கு மக்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அந்தக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி எடுத்த தீர்மானமானது அன்றையவிட இன்றும் சரியானது.

ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்ஷவை நியமித்தது எதேர்ச்சையான நிகழ்வு அல்ல. கடந்த மூன்றரை ஆண்டுகளில் கடந்து வந்த கசப்பான அனுபவங்களின் விளைவாகும்.

ரணில் விக்கிரமசிங்க தனக்கு விருப்பமான முறையில் மிக மோசமான நிலைக்கு ஆட்சியை கொண்டு சென்றார். ஒரு கட்டத்தில் என்னையும் அவர் கெடுத்துவிட்டார்.

வடக்கு மக்களை ஏமாற்றினார். தீர்வு கொடுக்க வாய்ப்பிருந்தும் அவர் அதை செய்யவில்லை. ஏமாற்றினார். தொழிலாளிகளை ஏமாற்றினார். நல்லாட்சியின் கொள்கையையும் சீரழித்து ஐக்கிய தேசியக் கட்சியையும் சீரழித்து என்னையும் சீரழித்தமையால் நான் பிரதமர் பதவியிலிருந்து ரணிலை விரட்டியடித்தேன். 62 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணையை ரணில் விக்கிரமசிங்க துஷ்பிரயோகம் செய்தார்.

நாட்டில் அரசியல் உறுதித்தன்மையும், வன்முறையும் ஒரு ஜனநாயகத்திற்கு அசாதாரணமான சூழ்நிலையும் இல்லை. நாட்டின் நீதிமன்றம் பக்கச்சார்பாக செயற்படுவதாக ஒருதரப்பு மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அவுஸ்திரேலியா, ஜேர்மன், இத்தாலி போன்ற நாடுகளில் ஆட்சி நிலைமைகளைப் பாருங்கள். அங்கு அரசுகள் இல்லாமலேயே நல்லாட்சி நிலவுகின்றன என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம)

## ஹிட்லர் முன்னெடுத்த ஆட்...

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசிய கட்சியாக இருந்தாலும் சரி ஐக்கிய தேசிய முன்னணியாக இருந்தாலும் சரி எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் ஜனநாயக கொள்கைகளின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டும்.

ஆகவே அரசியலமைப்புடன் விளையாடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிதாக அமைச்சர்கள் என வேடம் பூண்டுள்ள அனைவரும் யாப்புக்கு அமைவாக செயற்படுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கியதேசிய முன்னணியின் பாராளுமன்ற உறப்பினர்களான சஜித் பிரேமதாச, ரவி கருணாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், ராஜித சேனாரத்ன, லக்ஷ்மன் கிரியல்ல உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ம)

## ஜனாதிபதியின் உரைக்கு...

விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கடுமையாகச் சாடியிருந்தார். ரணில் நாட்டுக்குப் பொருத்தமற்றவர் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதுதொடர்பிலேயே மங்கள சமரவீர இந்தக் கருத்தை தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று மைத்திரிபால சிறிசேன பிடிவாதமான நிலைப்பாட்டில் இருப்பதால், ஐக்கிய தேசிய முன்னணி வெறுப்படைந்துள்ளது.

இனிமேல் அவரைச் சந்திக்கப் போவதில்லை என்றும், அவரைச் சந்திப்பதால் எந்தப் பயனும் இல்லை என்றும், நேற்று முன்தின சந்திப்புக்குப் பின்னர் ஐதேக தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியெல்ல கூறியிருந்தார்.

ஜனாதிபதி கடும்போக்கு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில், அவருக்கு எதிரான குற்றவியல்பிரேரணையை கொண்டு வரும் முனைப்புகளில் ஐக்கிய தேசிய முன்னணி தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற 150 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. எனினும், தற்போது, ஐக்கிய தேசிய முன்னணிக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. தவிர, 103 உறுப்பினர்களின் ஆதரவே உள்ளது.

குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கமாட்டோம் என்று கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பின் போது, ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்குறுதி அளித்துள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி குற்றவியல் பிரேரணையை கொண்டு வந்தாலும், அதனை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவையே எதிர்பார்க்கும் நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## நெருக்கடிகளுக்கு தீர்வுகாண...

சுட்டிக்காட்டப்படுகின்ற நிலையியல் கட்டளை மற்றும் அரசியலமைப்பு தொடர்பான சர்வதேச நிபுணர்கள் பாராளுமன்ற நடவடிக்கையினை அங்கீகரித்துள்ளனர்.

இதனடிப்படையில் எந்த அரசியல் தரப்பினரையும் ஓரங்கட்டவோ அல்லது உயர்த்துவது சபாநாயகரின் கடமை எனவும், தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக நாட்டில் பாரிய பிரச்சினைகளே தோற்றுவித்துள்ளது. பொருளாதார வீழ்ச்சி மற்றும், தனிமனித வாழ்க்கையினையும் பாதித்துள்ளது.

தாய் நாட்டின் கௌரவத்தினையும், ஜனநாயக கோட்பாடுகளையும் பாதுகாக்க வேண்டிய தேவை அனைவருக்கும் காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் கோட்பாடுகளை பின்பற்றுவது பாராளுமன்றத்தில் அங்கிகாரம் பெற்ற அனைத்து கட்சிகளின் அரசியல் மற்றும் தனிப்பட்ட கடமையாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


**மஹஜன சம்பத**

திகதி 2018/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 3804
ஆங்கில எழுத்து A வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 3 5 7 3 7
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

திகதி 2018.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 1963
ஆங்கில எழுத்து M வெல்லப்பட்ட இலக்கங்கள் 44 49 60 62
தேசிய லொத்தர் சபை

**நீரோகா**

திகதி 2018/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 481
லக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 03 24 37 50 26
தேசிய லொத்தர் சபை

**செவன**

திகதி 2018/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 141
ஆங்கில எழுத்து U வெல்லப்பட்ட இலக்கங்கள் 10 39 44 64
தேசிய லொத்தர் சபை

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(சி-4586)

## பாரா...

கப்பட்ட வகையில் இன்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் என படைக்கல சேவிதர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெரும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் பாராளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது.

பிரதமர் பதவியை வகித்த மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இன்றையதினம் மீண்டும் இலத்திரனியல் வாக்கெடுப்புமூலம் உறுதிப்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனைத் தொடர்ந்து சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(C-4608)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-4603)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 076 707 0069
M.Suren

NEW MATHS COLLEGE
158, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (Science Hall க்கு அருகாமையில்)
புதிய கல்வியாண்டு - 2019
தரம் 6 - 11 வரையிலான English Medium தமிழ்மொழி மூலமான கணித பாட வகுப்புக்கள்
ஆரம்பம்:- 05.12.2018 புதன்கிழமை
தரம் 6,7,8 - மு.ப 10.00 → பி.ப 12.30 வரை
தரம் 9,10,11 பி.ப 4.45 → பி.ப 6.15 வரை
+ தரம் 6 T.M/E.M இரண்டாவது புதிய பிரிவுகள் ஆரம்பம் மு.ப 11.45 → பி.ப 12.30 வரை (C-4593)
தொடர்பு:-0777071961 K. உமாகரன்

உடனடி வேலைவாய்ப்பு
எமது சர்வதேச நிறுவனத்தின் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கைக் கிளைகளில் 2018-ம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்களுக்கான சிறந்த வேலைவாய்ப்பு.
- பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு
- எதிர்காலத்திற்கான திட்டமிடல்
- சிறந்த சம்பளத்துடன் கூடிய பதவி உயர்வு
- வடக்கு, கிழக்கு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு: 077 123 7797
(C-4596)


பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
0773282051
(6680)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(6678)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை
(C-4590)

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 11 . 1951



மறைவு
02 . 12 . 2018

## சிவசுந்தரம் பரராஜசிங்கம் (ஜெயா)

பருத்தித்துறை வி.எம். றோட்டினை பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுந்தரம் பரராஜசிங்கம் கடந்த (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுந்தரம் - வனசாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், லஷ்மி ப்ரியா, ஜஸ்மின் ப்ரியதர்சினி ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2018) புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நீர்கொழும்பில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.எம்.றோட்,
பருத்தித்துறை.
077 338 5359

(சி-4604)

தகவல்: சகோதரன் -
சிவபாலசுந்தரம் (பபி),
சகோதரிகள்

பிரத்தியேக / குழுவகுப்புக்கள்
A/L 2019 & DAY / A/L 2020
கணக்கீடு
MR. BALAKAJEN
- கந்தர்மடச்சந்தி கந்தர்மடம் (Tue & Fri 5-7 P.M)
- கொழும்புத்துறை (Sat & Sun 2-5 P.M)
தொடர்புகளுக்கு : 076 077 5660, 076 565 5956
(6444)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
(C-4571)

40 வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. இல.: 077 662 9137
ஆண்டு 2019
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 2.00 மணி வரை
9, 10, O/L
ஆரம்பம் : 08.12.2018 சனிக்கிழமை
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 2.00 மணி வரை
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
- மாதாந்த பரீட்சைகள்
- அனுமதிகள் முன்கூட்டியே
- Day Class மிக விரைவில்
(சி-4607)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி இராசநாயகம் தையல்நாயகி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் பொருளாளர் திரு.இ.உமாசங்கர் அவர்களின் அன்புத் தாயார் அமரர் திருமதி இராசநாயகம் தையல்நாயகி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகனின் பாதக்கமலத்தை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

- தர்மகர்த்தா சபை,
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்.

(6674)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.